தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வளர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
NEWS
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009

PRGI No. TNBIL/25/A1569

வைகறையில்
# பேப்பர்பாய்
www.paperboy.biz
VAIGARAIYIL PAPERBOY

Advertise Your Business
MAKE YOUR BUSINESS KNOWN TO ALL

சென்னை மலர்: 01 இதழ்: 259 01.05.2026 வெள்ளிக்கிழமை
Chennai Volume: 01 Issue: 259 Friday pages 8 Rs.5/-
DISTRIBUTED ACROSS TAMIL NADU AND PUDUCHERRY

# ‘உழைப்பாளர்களின் உண்மைத் தோழனாக தி.மு.க. என்றென்றும் திகழ்ந்திடும்’

## முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் மே தின வாழ்த்து





**சென்னை, மே 1:**

தமிழக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள மே தின வாழ்த்துச் செய்தியில் கூறியிருப்பதாவது;-

“உழைப்பு என்பது மனித இனத்தின் வளர்ச்சிக்கு மட்டுமின்றி, அதன் அரசியல், சமூகப் பரிணாமத்திற்கும் அடிப்படைக் காரணியாக இருக்கும் உந்து சக்தியாகும். உலகினை உழைப்பால் செலுத்தும், உலகினுக்குத் தங்கள் வியர்வையால் உயிரூட்டும் பாட்டாளி வர்க்கத்தினருக்கு எனது உழைப்பாளர் நாள் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழிலாளர்களுக்காக மே நாளில் ஊதியத்துடன் கூடிய விடுமுறை, சென்னையில் மேதினப் பூங்கா, தொழிலாளர் நல வாரியம் என எண்ணற்ற பங்களிப்புகளைக் கழக ஆட்சிதோறும் பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞரும் செய்து வந்தனர்.

‘தந்தை பெரியாரையும், பேரறிஞர் அண்ணாவையும் சந்தித்திருக்காவிட்டால் நானும் கம்யூனிஸ்டாகத்தான் ஆகி இருப்பேன்’ என்று சொன்ன தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையில் ஆட்சி அமைந்த போதெல்லாம் தொழிலாளர் நலம்காக்க எண்ணற்ற திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றியது வரலாற்றின் பக்கங்களில் பொன்னெழுத்துகளாக மின்னிக் கொண்டிருக்கிறது. அந்த வழித்தடத்தில்தான் திராவிட மாடல் அரசிலும், இந்தியாவுக்கே வழிகாட்டும் பல தொழிலாளர் நலத்திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளோம். கழனியிலும் தொழிற்சாலைகளிலும் பாடுபடும் உழைப்பாளத் தோழர்களின் நலன்களை பாதுகாப்பது போலவே, தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்றுள்ள பெண்கள் மற்றும் திருநங்கைகள் புதிய ஆட்டோ ரிக்சா வாங்க மானியம், பதிவுபெற்ற அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கி, அமைப்பு சாரா தொழிலாளர்களின் நலன்களையும் பாதுகாக்கிறோம்.

அதோடு, இணையம் சார்ந்தகிக் தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாத்திடவும் நலவாரியம் உருவாக்கப்பட்டு, அதில் பதிவு செய்த தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் புதியதாக E-SCOOTER வாங்க மானியம் வழங்கும் புதிய திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டது.

அதுமட்டுமின்றி, அவர்கள் பணிகளுக்கிடையே ஓய்வு எடுக்கும் வகையில் அனைத்து வசதிகளுடன் கூடிய ஓய்வுக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இப்படி சாதனைகள் பல படைத்தும், பாட்டாளி மக்களின் உயர்வுக்கு நாம் கொண்டுள்ள உறுதியை வெளிப்படுத்தும் விதமாகவும், “உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள், நீங்கள் இழப்பதற்குக் கை விலங்குகளைத் தவிர எதுவுமில்லை” என அழைத்த உலக மாமேதை கார்ல் மார்க்சுக்கு சென்னையில் சிலை அமைத்துள்ளோம். இப்படி, சொல்லாலும் செயலாலும் வரலாற்றுச் சின்னங்களாலும் உழைப்பாளர்களையும் உழைப்பையும் போற்றுகிறோம்.

உழைப்பையும், உழைப்போரையும் கொண்டாடும் இந்த மே நாளில், திராவிட முன்னேற்றக் கழகம் தொழிலாளர்களின் உண்மைத் தோழனாக என்றென்றும் திகழ்ந்திடும் என்ற உறுதியையும், உழைக்கும் தோழர்களுக்கும் அவர்தம் குடும்பத்தினர் அனைவருக்கும் உளமார்ந்த வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.”

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# மேற்காசிய போரால் பணவீக்கம் அதிகரிக்கும் அபாயம்: நிதியமைச்சகம் அறிக்கை



**புதுடெல்லி, மே 1:**

மேற்காசியப் போரால் இந்தியாவில் பணவீக்கம் அதிகரிக்கும் அபாயம் இருப்பதாக மத்திய நிதியமைச்சக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காசியாவில் அமெரிக்கா-இஸ்ரேல், ஈரான் இடையே கடந்த பிப்ரவரி மாதம் முதல் போர் நடைபெற்று வருகிறது. தற்போது சண்டை நிறுத்தம் அமலில் உள்ள நிலையிலும், கச்சா எண்ணெய் கப்பல்கள் செல்லும் ஹோர்முஸ் நீரிணையை அமெரிக்க கப்பல்கள் முற்றுகையிட்டுள்ளன. இதனால் பல நாடுகளில் பெட்ரோல், டீசல், எரிவாயு ஆகியவற்றின் விநியோகம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மத்திய நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், ‘மேற்காசிய போரால் விநியோக வழித்தடம் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் பணவீக்கம் அதிகரிக்கும் அபாயம் உள்ளது. அதேபோல் வர்த்தகம், நிதி முதலீடும் பாதிக்கப்படக்கூடும். அதேநேரத்தில் இந்தியாவில் உள்ள வலுவான உள்நாட்டு தேவை, உறுதியான கொள்கை, நிதி அமைப்பு, தொடரும் பொதுமக்களின் முதலீடு ஆகியவை பொருளாதாரத்துக்கு உறுதுணையாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது’ என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மேற்கு வங்கத்தில் 700 கம்பெனி மத்தியப் படைகள் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்படும்: தேர்தல் ஆணையம்



**கொல்கத்தா, மே 1:**

மேற்கு வங்கத்தில் சட்டப் பேரவைத் தேர்தல் வாக்குப் பதிவு நிறைவடைந்த பிறகும், பாதுகாப்பு கருதி சுமார் 700 கம்பெனி மத்திய ஆயுதக் காவல் படையினர் அங்கேயே தங்கியிருப்பார்கள் என்று தேர்தல் ஆணைய மூத்த அதிகாரி தெரிவித்தார்.

தேர்தலுக்குப் பிந்தைய வன்முறைகளைத் தவிர்க்கவும், மாநிலத்தில் அமைதியை நிலைநாட்டவும் இந்த நடவடிக்கை என அவர் குறிப்பிட்டார்.

இதுகுறித்து தேர்தல் ஆணைய அதிகாரி மேலும் கூறியதாவது: தேர்தல் ஆணையத்தின் கடந்த மார்ச் 19-ம் தேதி வகுக்கப்பட்ட பாதுகாப்புத் திட்டத்தின்படி, வாக்குப்பதிவு முடிந்த பிறகும் 700 கம்பெனி மத்தியப் படையினர் மேற்கு வங்கத்திலேயே தங்கியிருப்பர். அவர்கள் சட்டம் - ஒழுங்கைப் பராமரிக்கவும், அசம்பாவிதங்களைத் தவிர்க்கும் பணியிலும் ஈடுபடுவர். மறு உத்தரவு வரும் வரை அவர்கள் பணியில் தொடர்ந்து இந்தப் பணிகளில் ஈடுபடுவார்கள். குறிப்பாக, பதற்றம் நிறைந்த பகுதிகளில் மாநில நிர்வாகத்திற்குத் துணையாக இவர்கள் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வர். கள நிலவரம் மற்றும் பாதுகாப்பு முகமைகளின் அறிக்கையின் அடிப்படையில் படைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது குறித்து முடிவெடுக்கப்படும். இவ்வாறு அவர் தெரிவித்தார். முன்னதாக, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா கடந்த திங்கள்கிழமை பேசுகையில், தேர்தல் முடிந்த பிறகு சுமார் 60 நாட்களுக்கு மத்தியப் படையினர் மேற்கு வங்கத்தில் நிலைநிறுத்தப்படுவார்கள் என்று தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# தமிழகத்திற்கு மே 2-ல் தேர்தல் பார்வையாளர்கள் வருகை

## தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தலைமையில் அலுவலர்களுக்கு பயிற்சி




**சென்னை, மே 1:**

தமிழகம் முழுவதும் 62 மையங்களில் மே 4-ம் தேதி நடைபெறும் வாக்கு எண்ணிக்கையை மேற்பார்வையிட தேர்தல் பார்வையாளர்கள் மே 2-ம் தேதி தமிழகம் வருகின்றனர்.

தமிழகத்தில் உள்ள 234 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கும் கடந்த ஏப்.23-ம் தேதி தேர்தல் நடைபெற்றது. எவ்வித அசம்பாவிதம், மறு வாக்குப்பதிவும் இன்றி நடைபெற்று முடிந்த இந்த தேர்தலில் முன்னெப்போதும் இல்லாத அளவு 85.10 சதவீதம் வாக்குகள் பதிவாகியுள்ளன.

75 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குச்சாவடிகளில் இருந்து பதிவான வாக்குகள் அடங்கிய மின்னணு இயந்திரங்கள், விவிபாட் மற்றும் கட்டுப்பாட்டு இயந்திரங்கள், அந்தந்த தொகுதிகள் அடங்கிய வாக்கு எண்ணும் மையங்களில் உள்ள ‘ஸ்டிராங்’ அறைகளில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

இந்த ஸ்டிராங் அறைகளுக்கு 4 அடுக்கு பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளதுடன், சிசிடிவி கேமரா மூலமும் கண்காணிக்கப்படுகிறது. தேர்தல் பாதுகாப்புப் பணிக்கு வந்த துணை ராணுவப் படையினரில் ஒரு பிரிவினர் அனைத்து வாக்கு எண்ணும் மையங்களிலும் பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்டுள்ளனர்.

இதுதவிர வாக்கு எண்ணிக்கை பாதுகாப்புக்காக 18 ஆயிரம் போலீஸார் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இந்நிலையில் வரும் மே 4-ம் தேதி 62 மையங்களிலும் காலை 8 மணிக்கு வாக்கு எண்ணிக்கை தொடங்குகிறது. முதலில் தபால் வாக்கு எண்ணிக்கை தொடங்கப்படும். அதன்பின் மின்னணு இயந்திரங்களில் பதிவான வாக்குகள் எண்ணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தமிழகத்தில் வாக்கு எண்ணிக்கை பாதுகாப்பு தொடர்பாக, நேற்று தலைமைச் செயலகத்தில் தலைமைச் செயலர் எஸ்.சாய்குமார் தலைமையில் ஆலோசனை நடைபெற்றது.

இதில் டிஜிபி சந்தீப் ராய் ரத்தோர், சென்னை காவல் ஆணையர் அபின் தினேஷ் மோடக், ஆவடி காவல் ஆணையர் பிரேம் ஆனந்த் சின்கா, தாம்பரம் காவல் ஆணையர் சஞ்சய் குமார் உள்ளிட்ட காவல் அதிகாரிகள் பங்கேற்றனர். இதில், வாக்கு எண்ணிக்கை முடியும் வரை தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு பராமரிப்பு, வாக்கு எண்ணிக்கை நாளில் பாதுகாப்பு உள்ளிட்டவை குறித்து விவாதிக்கப்பட்டது. சட்டப் பேரவைத் தேர்தலின்போது, ஏற்கெனவே சிறப்பு தேர்தல் பார்வையாளர் மற்றும் தொகுதிக்கு ஒரு தேர்தல் பார்வையாளர், காவல் துறை பார்வையாளர் மற்றும் செலவினப் பார்வையாளர்கள் என வெளி மாநில அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்களில் தேர்தல் பார்வையாளர்கள் வாக்கு எண்ணிக்கையை மேற்பார்வையிட வரும் மே 2-ம் தேதி தமிழகம் வருகின்றனர். இந்நிலையில், நேற்று தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தலைமையில், சென்னையில் 234 தொகுதிகளுக்குமான வாக்கு எண்ணிக்கை அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. சென்னை மாநிலக் கல்லூரி அரங்கில் நடைபெற்ற இதில், தேர்தல் நடத்தும் அலுவலர், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் உட்பட 3 பேர் என 234 தொகுதிகளுக்கும் சேர்த்து ஆயிரம் பேர் பங்கேற்றனர்.

புதுச்சேரி தேர்தல் அலுவலர் ஞானவேல் அனைவருக்கும் பயிற்சி அளித்தார். இதில் வாக்கு எண்ணிக்கை நடத்துவது, சுற்றுவாரியாக முடிவுகளை வெளியிடுவது, ஆவணங்களை பாதுகாப்பது உள்ளிட்ட பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

மே 1
அனைவருக்கும்
உழைப்பாளர் தின
வாழ்த்துக்கள்...
- ஆசிரியர் குழுமம்
பேப்பர்பாய்
www.paperboy.biz VAIGARAIYIL PAPERBOY

## இன்றைய நாள்

வெள்ளிக்கிழமை
(01–05–2026)
பராபவ ஆண்டு, சித்திரை–18
பிறை: வளர்பிறை
திதி
பௌர்ணமி இரவு 11.07 வரை பிறகு பிரதமை
நட்சத்திரம்:
சுவாதி நாளை விடியற்காலை 4.37 வரை பிறகு விசாகம்.
யோகம்
சித்த யோகம்
ராகுகாலம்
காலை 10.30–12.00 மணி.
எமகண்டம்
பிற்பகல் 3.00–4.30 மணி
சூலம் – மேற்கு
நல்ல நேரம் :
காலை 6–7 மணி.
மாலை 5–6 மணி.

| | |
|---|---|
| மேஷம் | சுபம் |
| ரிஷபம் | வெற்றி |
| மிதுனம் | மகிழ்ச்சி |
| கடகம் | ஆதரவு |
| சிம்மம் | நலம் |
| கன்னி | புகழ் |
| துலாம் | உழைப்பு |
| விருச்சிகம் | நற்செயல் |
| தனுசு | விருத்தி |
| மகரம் | கடமை |
| கும்பம் | இன்பம் |
| மீனம் | கண்ணியம் |

# டாலருக்கு நிகரான இந்திய மதிப்பு ரூ. 95–ஐ கடந்தது!

**புதுடெல்லி, மே 1:**

அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு தொடர்ந்து கடும் வீழ்ச்சியைச் சந்தித்து வந்தது.

கச்சா எண்ணெய் மற்றும் பிரெண்ட் கச்சா எண்ணெய் விலை நேற்று காலை 2.5 சதவிகிதத்துக்கு மேல் அதிகரித்துள்ளன. தற்போது ஒரு பீப்பாய் பிரெண்ட் கச்சா எண்ணெய் 113 டாலருக்கு மேல் விற்பனையாகி வருகின்றது.

இந்த நிலையில், நேற்று காலை 9 மணி நிலவரப்படி டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு 25 பைசா அதிகரித்து ரூ. 95.07 ஆக வர்த்தகமாகி வருகின்றது.

Follow our WhatsApp Channel
PADMA DIGITAL BROADCAST
Tamilnadu Epaper WhatsApp channel
Scan this QR code using the CAMERA to view or follow our Channel

## மதுரை சித்திரைத் திருவிழா சிறப்பிதழ் வெளியீடு






**மதுரை மே. 01:**

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் உள்ள ஸ்ரீ சிருங்கேரி சாரதா சங்கர மடத்தில் உள்ள ஸ்ரீ ஆதிசங்கரர், சந்திர மௌளீஸ்வரர்க்கு புதன் கிழமை பிரதோஷ வழிபாடு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது .

மடத்தின் நிர்வாகி நாகநாதன் சுவாமி சிறப்பு பக்தி பாடல்கள் பாடி தீபாராதனை செய்தார். சென்னை ஆன்மிக மலர் டிரஸ்ட் சார்பில் வெளியிடப்பட்ட மதுரை சித்திரைத் திருவிழா சிறப்பிதழ்களை சங்கர மட நிர்வாகி ஆசிரியர் நாகநாதன் ஸ்வாமிகள் பக்தர்கள் அனைவருக்கும் வழங்கினார்.

ஓய்வு பெற்ற வங்கி அலுவலர் கோபால் பக்தர்கள் அனைவருக்கும் பிரசாதம் வழங்கினார். தொடர்ந்து மானாமதுரை ஸ்ரீவீர அழகர் கோவில், அப்பன் பெருமாள் கோவில், தல்லாகுளம் தர்மமுனீஸ்வரர் கோவில், மதுரை மகாபெரியவா கோவில், கீழடி 18 சித்தர்கள் கோவில் பரமக்குடி சாலையில் உள்ள குறிச்சி வழிவிடு பெரிய நாச்சி காசிவிஸ்வநாதர் ஆகிய கோவில்களில் பக்தர்கள் அனைவருக்கும் சித்திரை திருவிழா சிறப்பிதழ் வழங்கப்பட்டது.

## திருச்செந்தூர் கோவிலில் எடப்பாடி பழனிசாமி குடும்பத்தினர் சாமி தரிசனம்



**திருச்செந்தூர், மே 01:**


தமிழக சட்டமன்ற தேர்தல் முடிவடைந்து தேர்தல் முடிவுக்காக பல்வேறு அரசியல் கட்சியினர் காத்திருக்கும் நேரத்தில் ஒவ்வொரு கட்சியினரும் தங்கள் கட்சி வெற்றி பெற வேண்டும் என்பதற்காக கோவில்களுக்கு சென்று சாமி தரிசனம் செய்து வருகின்றனர்.

அந்த வகையில் கடந்த 2 நாட்களுக்கு முன்பு த.வெ.க. தலைவர் விஜய் திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் சாமி தரிசனம் செய்தார். தொடர்ந்து அமைச்சர்கள் சேகர் பாபு, அனிதா ராதாகிருஷ்ணன் ஆகியோர் சாமி தரிசனம் செய்தனர்.

இந்த நிலையில் நேற்று காலையில் முன்னாள் முதலமைச்சரும், அ.தி.மு.க. பொதுச்செயலாளருமான எடப்பாடி பழனிசாமியின் மனைவி, அவரது உறவினர்கள், குடும்பத்தினர் மற்றும் முன்னாள் அமைச்சர் உடுமலை ராதாகிருஷ்ணன், அருப்புக்கோட்டை சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் சேதுபதி ஆகியோர் திருச்செந்தூர் கோவிலுக்கு வருகை தந்தனர். அவர்கள் நேற்று காலை கோவிலில் விஸ்வரூப தரிசனம் செய்தனர்.

தொடர்ந்து சுவாமி மூலவர், சண்முகர், விஸ்வரூப தீபாராதனை தரிசனம் செய்தனர். பின்னர் தட்சிணா மூர்த்தி, வள்ளி, தெய்வானை, சத்ரு சம்ஹார மூர்த்தி, பெருமாள் ஆகிய சன்னதியில் வழிபாடு செய்தனர். எடப்பாடி பழனிசாமி குடும்பத்தினர் நேற்று பழனி முருகன் கோவிலில் சுவாமி தரிசனம் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## பெருங்களத்தூரில் கடும் போக்குவரத்து நெரிசல் ஜி.எஸ்.டி ரோட்டில் அணிவகுத்து நின்ற வாகனங்கள்



**திருவண்ணாமலை, மே 01:**

திருவண்ணாமலை கோவிலில் நேற்று சித்ரா பவுர்ணமி விழா கொண்டாடப்படுகிறது. இதையொட்டி திரளான பக்தர்கள் கலந்து கொண்டு கிரிவலம் செல்வார்கள்.

பயணிகள் வசதிக்காக சென்னையில் இருந்து திருவண்ணாமலைக்கு சிறப்பு பஸ்கள் இயக்கப்பட்டு வருகிறது. நேற்று காலை முதலே ஏராளமானோர் தங்களது கார் உள்ளிட்ட வாகனங்களில் திருவண்ணாமலை நோக்கி சென்றனர்.

இதேபோல் இன்று (1-ந்தேதி) தொழிலாளர் தினத்தை முன்னிட்டு அரசு விடுமுறை மற்றும் தொடர்ந்து சனி, ஞாயிறு விடுமுறை நாட்கள் வருவதால் ஏராளமானோர் தங்களது சொந்த ஊர்களுக்கு சென்றனர். இன்று காலை முதல் சொந்த ஊர்களுக்கு சென்றவர்களும் ஏராளமான வாகனங்களில் சென்னையில் இருந்து புறப்பட்டு சென்றனர்.

திருவண்ணாமலை மற்றும் தென் மாவட்டங்களுக்கு செல்லும் வாகனங்கள் ஒரே நேரத்தில் சென்னையில் இருந்து புறப்பட்டு சென்றதால் பெருங்களத்தூர்-வண்டலூர் இடையே நேற்று மதியம் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

வாகனங்கள் ஊர்ந்தபடி மெதுவாக சென்றன. இதனால் வாகன ஓட்டிகள் கடும் சிரமம் அடைந்தனர்.

## தஞ்சை அருகே விவசாய நிலத்திலிருந்து பழங்காலத்து சிலைகள் கண்டெடுப்பு



**தஞ்சாவூர், மே 01:**

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், மானம்பாடியில் உள்ள வயலில் இருந்து பழங்காலத்து சுவாமி சிலைகள் கண்டெடுக்கப்பட்டன.

மானம்பாடி, பிரதான சாலையைச் சேர்ந்தவர் ஜோசப் மகன் அலக்ஸான்டர் (36). இவர், தனக்கு சொந்தமான வயலில் உள்ள வரப்பை வெட்டும்போது, அங்கு பழங்காலத்து சிலைகள் இருப்பதை கண்டறிந்தார்.

பின்னர், இது தொடர்பாக, அவர், கிராம நிர்வாக அலுவலர் லோகநாதனுக்கு தகவல் அளித்ததின் பேரில், அந்த இடத்திற்கு வந்த அவர், சுமார் ஒன்றரை அடி உயரம் கொண்ட யானை சிலை, 1, திருவாச்சி 1, சிறிய சுவாமி சிலைகள் 3, உடைந்த பானை 1 என மொத்தம் 6 எண்ணிக்கையில் உலோகத்தினாலான சிலைகளை சேகரித்தார். பின்னர், திருவிடைமருதூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வந்து வட்டாட்சியர் சாந்தமீனாவிடம், அந்த உலோகச் சிலைகளை வழங்கினார்.

இது தொடர்பாக வருவாய்த் துறையினர் கூறியது:

கண்டெடுக்கப்பட்ட சிலைகள் தொடர்பாக மாவட்ட நிர்வாகத்திடம் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள், இங்கு வந்து சிலைகளை சேகரித்துக் கொள்வார்கள். பின்னர், தொல்லியியல் துறையினர், சிலைகள் தொடர்பாக ஆய்வு மேற்கொண்டபின், இந்த சிலைகள் குறித்து தெரிய வரும் எனத் தெரிவித்தனர்.

## விஜய் - சங்கீதா விவாகரத்து வழக்கை விசாரித்த நீதிபதி பணியிட மாற்றம்!



**சென்னை, மே 01:**

தமிழ்நாட்டில் 82 மாவட்ட முதன்மை நீதிபதிகளை பணியிட மாற்றம் செய்து சென்னை உயர் நீதிமன்ற தலைமை பதிவாளர் எஸ்.அல்லி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அதில், சென்னை உயர் நீதிமன்ற சட்டப் பணி ஆணை குழு செயலாளர் ஆர். தோத்திர மேரி, சேலம் மாவட்ட வணிக வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றத்தின் நீதிபதியாகவும், சென்னை 10-வது கூடுதல் மாவட்ட நீதிபதி சுமதி சாய்பிரியா, திருவண்ணாமலை மாவட்ட முதன்மை நீதிபதியாகவும்,

சென்னை முதலாவது கூடுதல் குடும்பநல நீதிமன்ற நீதிபதி செல்வ சுந்தரி, சென்னை உயர் நீதிமன்ற சட்டப் பணி ஆணை குழு செயலாளராகவும், சென்னை குடும்ப நல நீதிமன்ற முதன்மை நீதிபதி எஸ்.சுபா தேவி, தூத்துக்குடி மாவட்ட முதன்மை நீதிபதியாகவும், திருவண்ணா மலை மாவட்டம் முதன்மை நீதிபதி மதுசூதனன், சென்னை சிறு வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்ற தலைமை நீதிபதியாகவும் நியமிக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

## மாம்பழம் விற்பனையின் போது போலி 500 ரூபாய் கொடுத்து மூதாட்டியை ஏமாற்றிய பெண்



**திருவள்ளூர், மே 01:**

திருவொற்றியூர் மார்க்கெட் பகுதியில் திருவள்ளூர் மாவட்டம் ஆரம்பாக்கம் பகுதியை சேர்ந்த ஜெயலட்சுமி என்ற மூதாட்டி கடந்த 35 ஆண்டுகளாக சாலை ஓரத்தில் கடை அமைத்து சீசனுக்கு ஏற்றார் போல் பழ வியாபாரம் செய்து வருகிறார். தற்போது மாம்பழ சீசன் தொடங்கி உள்ளதால் வழக்கம் போல் மாம்பழங்களை மொத்தமாக வாங்கி ஜெயலட்சுமி விற்பனை செய்து வந்தார்.

இந்த நிலையில் மாம்பழம் வாங்க வந்த பெண் ஒருவர் சிறுவர்கள் விளையாடும் டம்மி 500 ரூபாய் கொடுத்து ரூ.150 -க்கு மாம்பழம் வாங்கிவிட்டு மீதி பணத்தை வாங்கிச் சென்றார். சிறிது நேரம் கழித்து பையில் வைத்திருந்த அந்த 500 ரூபாய் நோட்டை மூதாட்டி ஜெயலட்சுமி எடுத்து பார்த்தபோது சந்தேகம் ஏற்பட்டது. அந்த ரூபாய்நோட்டை அருகில் இருந்தவர்களிடம் காட்டி கேட்டபோது அது போலியான டம்மி 500 ரூபாய் என்பது தெரிந்தது. இதனால் அதிர்ச்சி அடைந்த மூதாட்டி மிகுந்த மன வருத்தத்தில் கண்ணீர் விட்டார்.

ஏற்கனவே நோயால் சிகிச்சை பெற்று வரும் நிலையில் வியாபாரம் செய்ய உதவியாக இருந்த கணவரும் இறந்துவிட்டதால் ஜெயலட்சுமி வாழ்க்கையுடன் போராடி தன்னந்தனியாக பழ வியாபாரம் செய்து வருகிறார். மருத்துவ செலவுக்கே வியாபாரத்தில் கிடைக்கும் பணம் முழுவதும் செலவாகி விடும் நிலையில் போலியான 500 ரூபாய் கொடுத்து பெண் ஒருவர் ஏமாற்றியதை நினைத்து அவரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அவர் அந்த போலி 500 ரூபாய் நோட்டை அங்கு வந்தவர்களிடம் காண்பித்து கண் கலங்கியது பார்ப்பவர்களை பரிதாபப்பட வைத்தது. இந்த வீடியோ தற்போது சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது.

போலி ரூபாய் நோட்டை கொடுத்து மூதாட்டியை ஏமாற்றி மாம்பழம் வாங்கி சென்ற பெண் மீது போலீசார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பல்வேறு தரப்பினர் கோரிக்கை விடுத்து உள்ளனர். இது தொடர்பாக குறிப்பிட்ட நேரத்தில் மூதாட்டியிடம் மாம்பழம் வாங்கி சென்ற பெண் குறித்து அப்பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமரா காட்சிகளை ஆய்வு செய்து வருகிறார்கள்.

## வடநெம்மேலி பாம்பு பண்ணை மூடல்: விஷம் எடுப்பதை பார்க்க முடியாமல் சுற்றுலா பயணிகள் ஏமாற்றம்



**மாமல்லபுரம், மே 01:**

மாமல்லபுரம் அடுத்த வடநெம்மேலி கிழக்கு கடற்கரை சாலையில் தமிழ்நாடு அரசின் தொழில் வணிகத்துறை சார்பில், இருளர் பாம்பு பிடிப்போர் தொழில் கூட்டுறவு சங்கம் உள்ளது. இங்கு காடுகளில் இருந்து இருளர்களால் பிடித்து வரப்படும் கொடிய விஷமுள்ள கட்டுவிரியன், நல்லபாம்பு, கண்ணாடி விரியன், சுருட்டை பாம்புகள் பராமரிக்கப்பட்டு அதில் இருந்து விஷம் எடுத்து உள்நாட்டு, வெளிநாட்டு மருந்து கம்பெனிகளுக்கு விற்பனை செய்யப்படுகிறது. விஷம் எடுப்பதை சுற்றுலா பயணிகள் பார்ப்பதற்கு பெரியவர்களுக்கு ரூ.30-ம், சிறியவர்களுக்கு ரூ.18-ம் வசூலிக்கப்படுகிறது.

இந்த பாம்பு பிடிப்போர் கூட்டுறவு சங்கத்தில் 300-க்கும் மேற்பட்டோர் உறுப்பினராக உள்ளனர். அவர்கள் பாம்பு பிடிக்க அரசு சார்பில் வழங்கப்பட்ட உரிமம் வைத்துள்ளனர்.

இந்த நிலையில் பாம்புகளின் இனப்பெருக்கம் மற்றும் கோடை வெயிலின் வெப்பம் காரணமாக, மே மாதம் முதல் செப்டம்பர் வரை 5 மாதங்களுக்கு பாம்புகள் பிடிக்க அரசு தடைவிதித்து உள்ளது.

மேலும் பாம்பு பண்ணையும் மூடப்பட்டது. இந்த பாம்பு பிடி தடை காலத்தில் சங்க உறுப்பினர்களுக்கு அரசு நிவாரண தொகை வழங்க வேண்டும் என இருளர்கள் கோரிக்கை விடுத்து உள்ளனர். இந்த நெம்மேலி பாம்பு பண்ணை மூடியதால் விஷம் எடுப்பதை பார்க்க வரும் சுற்றுலா பயணிகள் ஏமாற்றம் அடைந்தனர்.

அருகில் இருக்கும் முதலை பண்ணையில் கூண்டில் வைத்திருக்கும் அணகோன்டா, மலைப்பாம்பு, நல்ல பாம்பு, கட்டுவிரியன் உள்ளிட்ட ஒருசில பாம்புகளை காட்சி பொருளாக மட்டுமே பார்த்து வருகின்றனர்.

## களக்காடு அருகே சிறுவன் ஓட்டி சென்ற கார் பள்ளத்தில் கவிழ்ந்து விபத்து– சிறுமி பலி



**நெல்லை, மே 01:**

நெல்லை மாவட்டம் களக்காடு அருகே உள்ள கீழதுவரை குளம் கிராமத்தை சேர்ந்தவர் முருகன் (வயது45). இவர் தனது காருக்கு பெட்ரோல் நிரப்புவதற்காக காரில் புறப்பட்டார்.

அப்போது அவரது சகோதரர் பால்பாண்டி மகன் துரைப்பாண்டி (17) தான் சென்று பெட்ரோல் நிரப்பி வருவதாக கூறியுள்ளார். முருகனும் அவரிடம் காரை கொடுத்து உள்ளார். சிறுவனான துரைப்பாண்டி காரை எடுத்துக்கொண்டு பெட்ரோல் நிரப்ப புறப்பட்டார்.

இதைப்பார்த்த அவரது உறவினர்களின் குழந்தைகளும் வருவதாக கூறினர் அதனைத் தொடர்ந்து துரைப்பாண்டியும், அதே ஊரை சேர்ந்த முருகன் மகள் கன்சிகா (4), தினேஷ் (10), பிரதீப் (9), லித்திஷ் (8) ஆகியோர்களையும் காரில் ஏற்றிக் கொண்டு சென்றார். பெட்ரோல் போட்டுவிட்டு மீண்டும் ஊருக்கு திரும்பி வந்து கொண்டிருந்தனர்.

களக்காடு மங்கம்மாள் சாலையில் சென்றபோது கார் திடீரென கட்டுப்பாட்டை இழந்து சாலையோரம் உள்ள பள்ளத்தில் கவிழ்ந்தது. இந்த விபத்தில் சிறுமி கன்சிகா சம்பவ இடத்திலேயே தலை நசுங்கி பலியானார்.

மேலும் காரை ஓட்டி சென்ற சிறுவன் துரைப்பாண்டி, தினேஷ், பிரதீப். லித்திஷ் ஆகிய 4 சிறுவர்களும் படுகாயம் அடைந்தனர். உறவினர்கள் அவர்களை மீட்டு சிகிச்சைக்காக துரைப்பாண்டியை களக்காடு தனியார் மருத்துவமனையிலும், தினேஷை நாகர்கோவில் தனியார் மருத்துவமனையிலும், பிரதீப், லித்திஷ் ஆகியோரை நெல்லை அரசு மருத்துவமனையிலும் அனுமதித்தனர். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இதுபற்றி களக்காடு போலீசில் புகார் செய்யப்பட்டது. போலீசார் காரை ஓட்டி வந்த சிறுவன் துரைப்பாண்டி, அவருக்கு காரை கொடுத்த முருகன் ஆகியோர் மீது வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

சிறுவன் ஓட்டிச் சென்ற கார் கவிழ்ந்து சிறுமி பலியான சம்பவம் களக்காட்டில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

## புதுச்சேரி சிறுமி கொலை வழக்கு: கருணாஸ் குற்றவாளி என தீர்ப்பு; மே 5-ல் தண்டனை விவரம் அறிவிப்பு



**புதுச்சேரி, மே 01:**

புதுச்சேரியை உலுக்கிய சிறுமி கொலை வழக்கில் கருணாஸ் குற்றவாளி என போக்சோ நீதிமன்றம் இன்று அறிவித்தது. வரும் மே 5-ம் தேதி தண்டனை அறிவிக்கப்படுகிறது.

முத்தியால்பேட்டை சோலை நகரைச் சேர்ந்த 5-ம் வகுப்பு படித்த 9 வயது சிறுமி கடந்த 2024 மார்ச் 2-ம் தேதி வீட்டின் அருகே விளையாடிக் கொண்டிருந்தபோது திடீரென மாயமானார். 2 நாட்களுக்குப்பின் அருகே உள்ள வாய்க்காலில் கை, கால்கள் கட்டப்பட்டு போர்வையால் சுற்றப்பட்ட நிலையில், பிணமாக மீட்கப்பட்டார்.

இச்சம்பவம் புதுச்சேரியை உலுக்கியது. முத்தியால்பேட்டை போலீஸார் வழக்கு பதிவு செய்து, அதே பகுதியைச் சேர்ந்த கருணாஸ் (19), விவேகானந்தன் (59) ஆகியோரை போக்சோ வழக்கில் கைது செய்தனர். இவ்வழக்கு தொடர்பாக 540 பக்க குற்றப்பத்திரிகையை போலீஸார் தாக்கல் செய்தனர்.

இதில் சிறையில் அடைக்கப்பட்டிருந்த விவேகானந்தன் கடந்த 2024 செப்டம்பரில் கழிவறையில் தூக்குப் போட்டு தற்கொலை செய்து கொண்டார். தொடர்ந்து வழக்கு போக்சோ விரைவு நீதிமன்றத்தில் நீதிபதி சுமதி முன்பாக நடந்தது. விசாரணை முடிந்த நிலையில் இன்று இந்த வழக்கில் தீர்ப்பு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் நீதிபதி சுமதி, குற்றம் சாட்டப்பட்ட கருணாஸை குற்றவாளி என அறிவித்தார். வரும் மே 5-ம் தேதி இரு தரப்பு வாதத்துக்கு பிறகு தண்டனை விவரத்தை அறிவிப்பதாக தெரிவித்தார்.

இவ்வழக்குதொடர்பாக அரசு தரப்பு வழக்கறிஞர் பச்சையப்பன் கூறியதாவது: பாலியல் நோக்கில் குழந்தை கடத்தல், குழந்தையை அடைத்து வைத்தல், கொலை செய்தல் ஆகிய பிரிவுகளிலும் தடயம் ஆதாரம் மறைத்து வைத்தல் மற்றும் போக்சோ சட்டம் 6-ன் கீழ் கருணாஸ் குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டது.

இவ்வழக்கில் மரணத் தண்டனைக்கான குற்றங்களுக்கான பிரிவுகள் இருக்கிறது. அரிதினும் அரிதான வழக்கு என உச்சநீதிமன்ற வழிகாட்டுதல் படி அரசு தரப்பு, எதிர்தரப்பு விவாதங்களுக்கு பிறகு தண்டனை விவரம் தெரிவிப்பார்கள்.

அரசு தரப்பில் குற்றவாளிக்கு மரணதண்டனைதான் தீர்வு என வாதங்கள் வைத்துள்ளோம். வாதங்கள் கடந்த 15 முதல் 17 வரை நடந்தது. எழுத்துப்பூர்வ வாதங்களையும் எடுத்து வைத்துள்ளோம்.

இவ்வழக்கில் புதுச்சேரி வழக்கறிஞர்கள் எதிர்தரப்புக்கு ஆஜராகவில்லை. இலவச சட்ட உதவி மையம் மூலம் விழுப்புரம் வழக்கறிஞர் குற்றம் சாட்டப்பட்டோர் தரப்புக்காக நீதிமன்றம் நியமித்தது. அரசு தரப்பு சாட்சியங்கள் 54 பேரை விசாரித்தோம். 80 ஆவணங்கள், பாதிக்கப்பட்ட சிறுமி செருப்பு, ஆடை, முடி, கைப்பற்றப்பட்ட உயிரி மாதிரிங்கள் சான்று பொருட்களாக சமர்பித்தோம்.

கடந்த 2024 நவம்பரில் சாட்சி விசாரணை தொடங்கியது. இவ்வழக்கில் 54 சாட்சிகள் குறுக்கு விசாரணை செய்யப்பட்டன. குற்றம் சாட்டப்பட்ட விவேகானந்தன் தற்கொலை செய்ததால் அவர் மீது இவ்வழக்கில் இருந்த எஸ்சிஎஸ்டி வன்கொடுமை தடுப்பு சட்டப்பிரிவுகள் எடுக்கப்பட்டன. மேலும் குற்றம் சாட்டப்பட்டோர்செல்போனில் ஆபாச வீடியோக்கள், உயிர் மாதிரிகள் கிடைத்தன.

முக்கிய வழக்குகளில் பாலியல் குற்றங்கள் மற்றும் போக்சோ வழக்குகளில் கூட்டு பாலியல் வன்கொடுமை, குழந்தை இறப்பு , குழந்தை 12 வயதுக்கு கீழ் இருப்பது ஆகிய மூன்று குற்றங்கள் அடிப்படையில் இவ் வழக்கு இருக்கிறது. அதனால் தண்டனையை உடன் அறிவிக்க இயலாது.

வழக்குகளில் குற்றவாளி தீர்ப்பு வந்த பிறகு என வந்த பிறகு தண்டனை குறைக்க குற்றவாளி தரப்பும், அதிகபட்ச தண்டனை தர அரசு தரப்பும் வாதம் செய்யவுள்ளனர். அதன்பிறகுதான் தண்டனை விவரம் அறிவிக்கப்படும்" என்றார். இவ்வழக்கு விசாரணை பார்ப்பதற்காக சிறுமி பெற்றோர், உறவினர்கள் நீதிமன்றம் வந்திருந்தனர்.

## திருப்பூர் ரியல் எஸ்டேட் விற்பனை
சிறந்த முதலீட்டு வாய்ப்பு

PREMIUM PLOT SALE
Tiruvallur to Oothukottai Highway NH on Rd Site
VGP THIRU NAGAR, PHASE-1
- Location: (Nr Mylapore Jn)
- Direction: N/ Face
- Total Area: 2400 sft
- Price: RS.650/sft

LIMITED PLOTS AVAILABLE!
Contact Us: 9445315510 / 9283257193
VGP Developers - Your Trusted Partner

## டீலர்கள் தேவை
மைலேஜ் பூஸ்டர்
20% ~ 30%
மிக அதிகமான மைலேஜ் குறைந்த புகை
சுலபமான வாகன ஓட்டம் குறையும் மாசு
நேரடி விற்பனையாளர்களும் டீலராகலாம்
Manufactured By: Dlag Technologies, Chennai 33
போன் 63746 73041

## நிலம் தேவை
தெற்கு சென்னை
திருப்போரூர் to செங்கல்பட்டு ரோடு
1 to 2 ஏக்கர்
தொடர்புக்கு: Ph. 6384617773

## SUN SHINE PROPERTY
(Property & Developers)
லேயவுட், நிலம் & ஷேரிங் டாக்குமெண்ட்ஸ் தேவை
மனை விற்பனை
• பொன்மார் • சித்தாலப்பாக்கம்
600, 850, 900 sqft
முகவரி: K.K. நகர் சென்னை - 78 | தொடர்புக்கு: PH.9840804617

## Annai Violet Arts & Science College
(Affiliated to the University of Madras, Co-Ed | NAAC Accredited)
UG & PG COURSES
ADMISSIONS OPEN
BANK LOAN
Ph : 044-26861611 | 26864684 | 9344900911 | 6383425388

## WANTED
IMMEDIATE OPENINGS AVAILABLE!
- HOUSEKEEPING STAFF (Male & Female)
- MARKETING EXECUTIVE - ELECTRICAL FIELD (Male & Female)
- ELECTRICIAN & HELPERS (Weekly / Monthly Wages)
- ELECTRICAL SUB-CONTRACTOR
- DRIVER

GOOD SALARY | FLEXIBLE WORK OPTIONS | IMMEDIATE JOINING
CONTACT NOW: 9363133253
HURRY! LIMITED VACANCIES AVAILABLE!

## சிங்கபெருமாள்கோயில்
S.P கோயில். On. GST Road
2 ஏக்கர் விற்பனை
1 ஏக்கர் 25cr

வண்டலூர்
கேளம்பாக்கம் ரோடு
17 ஏக்கர் விற்பனை
1 acre 16 cr
Ph. 9566055082

## EMI 50%
50% OFFER
PLOT FOR SALE
SITE NO: 2
SITE NAME: ஸ்ரீ நகர்
LOCATION: கருங்குழி, மேலாவலம்பேட்டை
SRI DEVELOPERS
LOCATION: ADAMBAKKAM, GUINDY.
OUR PROJECTS
SITE NAME: BHARATHI NAGAR
LOCATION: MULLI, MADHURANTHAGAM.
CONTACT US NOW FOR BOOKING!
PH. NO: 8220711499, 8870158259

## A.S.R ரியல் எஸ்டேட்
முருகன் துணை
காஞ்சிபுரம்
சுலப தவணை உள்ள வீட்டு மனைகள் வாங்க, விற்க மற்றும் பட்டா மாறுதல் பெயர் மாற்றம் செய்து தரப்படும்.
காஞ்சிபுரம், செய்யாறு உள்ள வீட்டு மனைகள் மற்றும் உள்ள அனைத்து மாவட்டகளிலும்
அணுகவும்
7305025591, 9578622711

## GREEN HOUSING & PROPERTIES
மண்ணும் பொன்னும் சிறுசேமிப்பு திட்டம் 50 - 50 EMI
OFFER PRICE ரூபாய் ₹1.80 லட்சம்
800 SQFT
FREE FREE!!! 10 கிராம் GOLD COIN சேமியுங்கள்
VILLA PLOTS FOR SALE
BOOK NOW
+91 77083 95118

## PLOTS FOR SALE SRI DEVELOPERS
மனைகள் விற்பனைக்கு
கிண்டி
மதுராந்தகம், கருங்குழி, ஓரகடம், படப்பை
EMI Available
BANK LOAN Available
CONTACT: 8220711499, 8870158259

## ePAPER PUBLISHING
WEBSITE / SOFTWARE
Publish | Manage | Deliver
Complete Solution for ePaper Publishing
- Daily ePaper
- Archive Management
- Subscription & Free Access
- Google Ads Integration
- Upload PDF & Publish
- Mark, Crop, Cut & Share
- Share on Social Media

COMPLETE ePAPER WEBSITE / SOFTWARE FOR JUST ₹2999/- PER YEAR
HOSTING Included | ADMIN PANEL Included | MEMBER PANEL Included
ALL ESSENTIAL FEATURES
CALL / WHATSAPP: 9040463899

## JUST Xth PASS
JOB OPPORTUNITY
₹ 25,000/- PER MONTH *
All Taluks & Districts in ALL STATES in INDIA
- FRESHERS CAN APPLY
- ATTRACTIVE SALARY
- GROWTH OPPORTUNITIES
- SECURE YOUR FUTURE

APPLY NOW!
Call / WhatsApp: 8122664699
*Terms & Conditions Apply

## அகிலாண்டேஸ்வரி நகரில் வீட்டு மனைகள் உள்ளது
மனை அளவு = 30x40 = 1200 ச.அடி
மனை விலை 1,20,000/- மட்டும்
Cell :7305025591
இடம்: பத்தமடை உள்ளது திருநெல்வேலி மாவட்டம்
LOCATION

## நிலம் தேவை
தெற்கு சென்னை
சென்னை
திருப்போரூர் 1 - 2 ஏக்கர்
செங்கல்பட்டு
திருப்போரூர்-செங்கல்பட்டு ரோடு
உடனடி தேவை!
தொடர்புக்கு
Ph: 6384617773

## ₹ 15000 - 21000 | Monthly
Full Time Job Apply, Fresh or Experienced,
100% Job Available Here. No registration fee, Direct Job,
Chennai, Tamilnadu,
- 12th to Graduate and Diploma/ITI Qualified and Other Degree Holders.
- Back Office,
- Data Entry,
- Tele Caller's,
- Field officer,
- Team management, Male/Female Both Can Apply,

Share Your Resume with Photo to
77899 41009

## PLOT FOR SALE
பொன்னேரி, திருவள்ளூர், கடம்பத்தூர் அருகில்
வீட்டு மனைகள் விற்பனைக்கு
BANK LOAN AVAILABLE
Contact: 9841495210

## WANTED
- LAB HELPER
- OFFICE BOY
- GARDENER

CHEMBARAMBAKKAM
CALL US 7550093245 / 7358696451

## WANTED
Work From Home Opportunity
Telecallers Required
Also Hiring for IT Jobs
- Salary: ₹10,000 - ₹15,000
- Attractive Incentives
- Flexible Work From Home Option

Freshers & Experienced Both Can Apply
Contact Now: 9566072935

## D.சக்திவேல்
உங்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு
உங்கள் ஜோதிடர் 9940374962
அனுபவம் வாய்ந்த பாரம்பரிய ஜோதிடர்
இன்றே அழையுங்கள்: D. சக்திவேல் - 9940374962

## திருமுடிவாக்கம்
அருகாமையில் அமைந்துள்ள சாரதா கம்பெனிக்கு
ஆட்கள் தேவை
ஆண்கள் மட்டும்
வயது: 18 முதல் 35 வரை
கல்வி தகுதி
10 முதல் any Degree
தங்கும் இடம் உணவு வசதி உண்டு
ESI, PF, Attendance Allowance போன்ற அனைத்து வசதிகளும் உண்டு
சம்பளம் :
18,000 முதல் 22,000 /-
தொடர்புக்கு :
9962400330, 9962400319, 9962400336
மெயில் : hrsarathagroup@gmail.com

## WANTED
ELECTRICIAN SUPERVISOR / ELECTRICIAN
EGMORE, MOUNT ROAD
CALL US 7550093245 / 7358696451

## MATRIMONY WEBSITE/SOFTWARE
VIVAH | SHAADI | PELLI | KALYANAM
Find Your Perfect Life Partner
Trusted by Thousands, Chosen for a Lifetime
COMPLETE MATRIMONY WEBSITE FOR JUST ₹2999/- PER YEAR
HOSTING Included | ADMIN PANEL Included | MEMBER PANEL Included
ALL ESSENTIAL FEATURES
GET YOUR PROFESSIONAL MATRIMONY WEBSITE TODAY!
BEST PRICE BEST SOLUTION
CALL US 9040463899
WEBSITE www.matrimonyweb.in


## WANTED
OFFICE BOY
GUINDY
CALL US 7550093245 / 7358696451

## WANTED
Retd, VRS, Home Makers, NRIs, Business Person
Contact
8248951872

## ADVERTISE WITH US
7789941009

# கவிதை அரங்கம்!





பூக்களுக்குக் கூடத்
தெரியாது, நீ சிரிக்கும்
போது அவை வாடிப்
போகின்றன என்று.

நீ தொடும் இடமெல்லாம்
பூக்களாகப் பூக்கின்றன
என் இதயத்தில்.

என் சிறு சிறு அடம்
பிடிப்புகளுக்கு உன்
முத்தங்களே முற்றுப்புள்ளி.

ஆயிரம் உறவுகள்
இருந்தாலும், உன்
ஒரு உறவே என்
வாழ்க்கைக்குப்
போதுமானது.

நீ மறைந்து நின்றாலும்
உன் வாசனை உன்னை
என்னிடம் காட்டிக்
கொடுத்துவிடும்.

## வாழ்க்கை தத்துவம்...



அடுத்தவர் சொத்துக்கு ஆசைப்படாதே.

உழைக்காமல் வரும் பணம் நிலைக்காது.

ஏழைகளுக்கு உதவுவது இறைவனுக்குச் செய்யும் தொண்டு.

செல்வம் என்பது பிறருக்குப் பயனுள்ளதாக இருக்கும் போதே மதிப்பைப் பெறுகிறது.

ஆடம்பரம் ஒரு போலித்தனமான மகிழ்ச்சி.

திருப்தி இல்லாத மனிதன் எவ்வளவு கோடி இருந்தாலும் ஏழைதான்.

# பொம்மை

கந்தசாமி - முத்துலட்சுமி தம்பதியின் வீடு அதுவரை கண்டிராத ஒரு நிசப்தத்தில் உறைந்து போயிருந்தது. சரியாக பத்து நிமிடங்களுக்கு முன்புதான் அந்த வீட்டில் ஒரு பெரும் புயல் அடித்து ஓய்ந்தது போலிருந்தது.

மூத்தவன் இராஜசேகர் வீட்டின் தூணைப் பிடித்தபடி, தலைகுனிந்து நின்றிருந்தான். அவன் அப்பா கந்தசாமியின் மளிகை வியாபாரத்தை நவீன சூப்பர் மார்க்கெட்டாக மாற்றி ஊருக்குள் 'பிசினஸ் புலி' என்று பெயர் வாங்கியவன். ஆனால், இப்போது சொந்த வீட்டுப் பிரச்சினைக்குத் தீர்வு காணத் தெரியாமல் திகைத்து நின்றான்.

பிரச்சினைக்குக் காரணமான அமுதா, தன் அம்மாவின் மடியில் அமர்ந்து அழுது கொண்டிருந்தாள். அமுதா அந்த வீட்டின் செல்ல மகள். பட்டப்படிப்பு முடித்திருந்தாலும், புகுந்த வீட்டிற்குப் போவதை விட பிறந்த வீட்டிலேயே காலத்தைக் கழிப்பதுதான் அவளுக்கு வாடிக்கை. உள்ளூரிலேயே பெரிய இடத்துத் தர்மலிங்கத்தின் மகன் அரவிந்தை அவளுக்கு முடித்துக் கொடுத்ததே, மகள் கண்ணுக்குள்ளேயே இருக்க வேண்டும் என்பதற்காகத்தான்.

மறுபுறம், இராஜசேகரின் மனைவி பிரபா, கண்கள் சிவக்க, மூச்சு இரைக்க சமையலறை வாசலில் நின்றிருந்தாள். இத்தனை வருடத்தில் பிரபா இப்படிப் பொங்கி எழுந்து யாரும் பார்த்ததில்லை.

காரணம் ஒரு சின்ன பொம்மை.

வழக்கம் போல் அமுதாவின் மகன், பிரபாவின் மகளிடம் இருந்த அந்தச் சிவப்புக் கலர் பொம்மையைப் பிடுங்கினான். பெண் குழந்தை தர மறுக்க, அமுதா இடையில் புகுந்தாள். "ஏய்... அவன் சின்னப் பையன் தானே? குடுத்துத் தொலையேன்... உங்க அம்மா மாதிரியே உனக்கும் பிடிவாதம் அதிகம்," என்று குழந்தையைத் திட்டியது மட்டுமல்லாமல், பிரபாவை வம்புக்கு இழுத்தாள் அமுதா.

வழக்கமாக அமுதா, பிரபாவை வேலைக்காரி போல நடத்துவாள். "அண்ணி காபி ஆறிப்போச்சு," "துணி சரியா துவைக்கல," என்று கிண்டல் செய்வாள். அப்போதெல்லாம் இராஜசேகர், "விடு பிரபா... அவ நம் வீட்டுப் பொண்ணு... கிடந்துட்டுப் போறா," என்று பிரபாவைச் சமாதானம் செய்வான்.

ஆனால் இன்று, தன் குழந்தை நியாயமற்று அதட்டப்பட்டதைக் கண்டதும் பிரபாவிற்குள் இத்தனை நாள் அடக்கி வைத்திருந்த எரிமலை வெடித்தது.

"என் புள்ளை பொம்மை வெச்சு விளையாடக் கூடாதா? நீங்க உள்ளூர்ல கல்யாணம் பண்ணிக்கிட்டு வாரத்துக்கு நாலு நாள் இங்க வந்து அதிகாரத்தை ஓட்டுவீங்க... நான் என் புருஷன் வீட்ல இருந்துகிட்டு அகதி மாதிரி இருக்கணுமா?" என்று பிரபா கத்தினாள்.

வார்த்தைகள் தடித்தன. அமுதா, "இது என் அப்பன் வீடு," என்று கத்த, பிரபா "இது என் புருஷன் உழைச்ச வீடு," என்று பதிலடி கொடுத்தாள். பத்து நிமிடத்தில் வீடு ரணகளமானது. கந்தசாமியும் முத்துலட்சுமியும் யாரை அடக்குவது என்று தெரியாமல் விழித்தனர்.

சண்டை ஓய்ந்த பிறகு, பிரபா அழுதுகொண்டே மூலையில் அமர்ந்திருக்கிறாள். கந்தசாமியும், முத்துலட்சுமியும் மெதுவாக அவள் அருகில் வந்து அமர்கிறார்கள்.

முத்துலட்சுமி: "அழாதம்மா பிரபா... நாங்க இருக்கோம்ல..."

பிரபா: "இல்ல அத்தை... இனிமே என்னால முடியாது. இத்தனை வருஷமா பொறுத்துட்டேன். 'அண்ணி சமைக்கவே தெரியல, உப்பு கூட போடத் துப்பில்லை'னு என் சமையலை குறை சொன்னா... நான் தாங்கிக்கிட்டேன். நான் வேலை செய்யும்போது, கால் மேல கால் போட்டுக்கிட்டு என்னை வேலைக்காரி மாதிரி அதிகாரம் பண்ணா... அதையும் ஏத்துக்கிட்டேன். என் புருஷன்கிட்ட என்னை பத்தி இல்லாததும் பொல்லாததும் சொல்லி கிண்டல் அடிச்சா... சிரிச்சுக்கிட்டே கடந்தேன். ஆனா, இன்னைக்கு என் குழந்தையையும் அதிகாரம் பண்ணும்போது தான் அத்தை என் பொறுமை போச்சு..."

கந்தசாமி: "எல்லாம் எங்க தப்புத்தாம்மா. 'செல்லமா வளர்ந்த பொண்ணு, புகுந்த வீட்ல கஷ்டப்படக் கூடாது'னு நினைச்சு, அவ இங்க பண்ற தப்பையெல்லாம் நாங்க கண்டுக்காம விட்டதுதான்... இன்னைக்கு அது தலைக்கு மேல போயிருச்சு."

முத்துலட்சுமி: "ஆமாம் பிரபா. அவ பெத்த பொண்ணுங்கிற பாசத்துல கண்ணை மூடிக்கிட்டு இருந்துட்டோம். ஆனா, மருமகளான நீ, இத்தனை வருஷமா ஒரு முகம் சுளிக்காம, எங்களை கவனிச்சுக்கிட்டப்ப... 'நீதான் உண்மையான மகள்'னு நாங்க அப்பவே புரிஞ்சிருக்கணும். பெத்த பாசம் கண்ணை மறைச்சிருச்சுத்தா."

கந்தசாமி: "இனிமே அப்படி நடக்காது பிரபா. இராஜசேகர் பொண்டாட்டியா மட்டும் இல்லாம, இந்த வீட்டுக்கு வாரிசு கொடுத்த அம்மாவா உனக்கு முழு உரிமை இருக்கு. அமுதாவை எப்படி கண்டிக்கணுமோ அப்படி இனி நான் கண்டிச்சுக்கிறேன். நீ கண்ணீரைத் துடை. நீ எங்களுக்கு மருமக இல்லம்மா... மூத்த மக!"

அப்போது, வீட்டின் பின்புறத்திலிருந்து சிரிப்பொலி கேட்டது.

இராஜசேகர் மெதுவாக எட்டிப் பார்த்தான். அங்கே, சற்று முன்பு எந்தப் பொம்மைக்காக இந்த வீடு இரண்டு பட்டதோ, அந்தச் சிவப்புக் கலர் பொம்மை வாசற்படியில் கேட்பாரற்றுத் தனியாகக் கிடந்தது. சற்று தள்ளி... அமுதாவின் மகனும், பிரபாவின் மகளும் கைகோர்த்துக் கொண்டு, "ரயிலு... ரயிலு..." என்று சத்தம் போட்டபடி, தோட்டத்தில் ஓடிப் பிடித்து விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

அவர்கள் முகத்தில் சண்டையிட்டதற்கான எந்த வடுவும் இல்லை.

அதைப் பார்த்த இராஜசேகர், பிரபாவின் தோளைத் தொட்டு அந்தச் சன்னல் வழியே காட்டினான். அதைப் பார்த்த பிரபாவின் கோபம் வடிந்து, உதட்டில் மெல்லிய புன்னகை அரும்பியது. அமுதாவும் அந்தச் சிரிப்பொலி கேட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

குழந்தைகள் விளையாட்டுக்குக் கடந்து விட்டார்கள். ஆனால், அந்தப் பொம்மை மட்டும் பெரியவர்களின் முதிர்ச்சியற்ற மனநிலையைப் பார்த்து ஏளனமாய் சிரிப்பது போல, அந்த வாசற்படியில் தனியாகக் கிடந்தது.

குழந்தைகள் சண்டையை விளையாட்டின் ஒரு பகுதியாகவே பார்க்கிறார்கள்; மறந்து விடுகிறார்கள். ஆனால் பெரியவர்களோ, சிறிய விஷயங்களையும் கௌரவப் பிரச்சினையாக மாற்றி உறவுகளுக்குள் விரிசலை உண்டாக்கிக் கொள்கிறார்கள்.



**மை.சத்திய பாரதி**

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



கேள்வி: கரண்ட் (CURRENT) போயிட்டா நம்மால பார்க்க முடியாது. ஆனா கரண்ட்டால நம்மள பார்க்க முடியுமா?

பதில்: முடியும். ஏன்னா, அதுக்குதான் 'மெயின் பெட்டி' (EYE/கண்) இருக்கே!




# தினம் ஒரு சமையல்



## காய்கறி பிரியாணி

### தேவையான பொருட்கள்:


அரிசி: பாசுமதி அரிசி - 2 கப் (20 நிமிடம் ஊறவைக்கவும்)
காய்கறிகள்: கேரட், பீன்ஸ், உருளைக்கிழங்கு, பச்சை பட்டாணி - தலா ஒரு கைப்பிடி
தாளிக்க: பட்டை, கிராம்பு, ஏலக்காய், பிரியாணி இலை, கல்பாசி
மசாலா பொருட்கள்:
பெரிய வெங்காயம் - 2 (நீளமாக நறுக்கியது)
தக்காளி - 2
இஞ்சி பூண்டு விழுது - 1 மேசைக்கரண்டி
பச்சை மிளகாய் - 3
மிளகாய்த்தூள் - 1 தேக்கரண்டி
மல்லித்தூள் - 1 தேக்கரண்டி
கரம் மசாலா - 1/2 தேக்கரண்டி
மற்றவை: புதினா, மல்லித்தழை, தயிர் (2 ஸ்பூன்), நெய் மற்றும் எண்ணெய் தேவையான அளவு.



### செய்முறை:

தாளித்தல்: குக்கரில் எண்ணெய் மற்றும் நெய் ஊற்றி சூடானதும், தாளிக்கக் கொடுத்துள்ள பொருட்களைச் சேர்க்கவும். பின் வெங்காயம் மற்றும் பச்சை மிளகாய் சேர்த்து பொன்னிறமாகும் வரை வதக்கவும்.
வடித்தல்: இஞ்சி பூண்டு விழுது சேர்த்து பச்சை வாசனை போகும் வரை வதக்கி, பின் தக்காளி மற்றும் புதினா, மல்லித்தழை சேர்த்து நன்கு வதக்கவும்.
காய்கறிகள்: நறுக்கிய காய்கறிகளைச் சேர்த்து 2 நிமிடம் வதக்கி, பின் தயிர், மிளகாய்த்தூள், மல்லித்தூள், கரம் மசாலா மற்றும் தேவையான அளவு உப்பு சேர்த்து கிளறவும்.
அரிசி சேர்க்க: 1 கப் அரிசிக்கு 1.5 கப் தண்ணீர் வீதம் (2 கப் அரிசிக்கு 3 கப் தண்ணீர்) ஊற்றவும். தண்ணீர் கொதிக்க ஆரம்பித்ததும், ஊறவைத்த அரிசியைச் சேர்க்கவும்.
வேகவைக்க: குக்கரை மூடி 2 விசில் விடவும். பிரஷர் குறைந்ததும் மெதுவாகக் கிளறி விடவும்.
சுவை கூட்டும் குறிப்புகள்:
நெய்: கடைசியாக ஒரு ஸ்பூன் நெய் மற்றும் வறுத்த முந்திரி சேர்த்தால் சுவை இன்னும் கூடுதலாக இருக்கும்.
காய்கறிகள்: காய்கறிகள் வேகும்போது அதிகப்படியான தண்ணீர் சேர்த்துவிடாதீர்கள், இல்லையெனில் சாதம் குழைந்துவிடும்.
தேங்காய்ப்பால்: தண்ணீருக்குப் பதில் சரிபாதி தேங்காய்ப்பால் சேர்த்தால் பிரியாணி மிகவும் ருசியாக இருக்கும்.

## இண்டு பயன்கள்



'இண்டு' (CLIMBING BRIER) என்பது காடுகள் மற்றும் வேலிகளில் படரக்கூடிய ஒரு முள் செடியாகும். சித்த மருத்துவத்திலும், கிராமிய மருத்துவத்திலும் இதற்கு மிக முக்கியமான இடம் உண்டு. இதன் இலைகள், பூக்கள் மற்றும் வேர்கள் மருத்துவக் குணங்கள் கொண்டவை.

இண்டுச் செடியின் முக்கிய பயன்கள் இதோ:

1. சுவாசப் பாதை கோளாறுகள்
இண்டு இலை சுவாசப் பிரச்சனைகளைத் தீர்ப்பதில் வல்லது.
இருமல் மற்றும் சளி: இண்டு இலையைச் சாறு எடுத்து தேனுடன் கலந்து சாப்பிட்டால் நாள்பட்ட இருமல் மற்றும் சளி குணமாகும்.
ஆஸ்துமா: மூச்சுத் திணறல் அல்லது ஆஸ்துமா பிரச்சனை உள்ளவர்களுக்கு இதன் இலை மருந்தாகப் பயன்படுகிறது.

2. ஜீரண மண்டல ஆரோக்கியம்
பசியைத் தூண்ட: பசியின்மையால் அவதிப்படுபவர்களுக்கு இண்டு இலை சிறந்த மருந்து. இது ஜீரண சக்தியை அதிகரித்து பசியைத் தூண்டும்.
மலச்சிக்கல்: வயிற்றுப் பாதையைச் சீர்செய்து மலச்சிக்கல் பிரச்சனையைத் தீர்க்க உதவுகிறது.

4. பித்தத்தைக் குறைக்க உடலில் பித்தம் அதிகரிப்பதால் ஏற்படும் தலைச்சுற்றல், வாந்தி போன்ற உணர்வுகளைக் குறைக்க இண்டு இலைச் சாறு பயன்படுகிறது. இது ரத்தத்தைச் சுத்திகரிக்கவும் உதவுகிறது.

# 'கர' ஒடிசா சம்பவத்தை ஞாபகப்படுத்துகின்றதா.? மெய் சிலிர்த்து பாராட்டிய மாரி செல்வராஜ்

தமிழ் சினிமாவில் புதிய முயற்சியாக, தனுஷ் நடிப்பில் உருவாகியுள்ள 'கர' திரைப்படம் இன்று திரையரங்குகளில் வெளியாகி ரசிகர்களின் எதிர்பார்ப்பை கிளப்பியுள்ளது.

விக்னேஷ் ராஜா இயக்கத்தில் உருவான இந்த படம், 'போர் தொழில்' மூலம் கவனம் பெற்ற இயக்குநரின் அடுத்த முக்கிய முயற்சியாக பார்க்கப்படுகிறது.

1990-களின் ராமநாதபுரத்தை பின்னணியாகக் கொண்டு, வங்கிக் கொள்ளையை மையமாக வைத்து உருவாகியுள்ள 'கர', கிராமத்து மண்வாசனையுடன் கூடிய ஆக்சன் திரில்லராக வடிவமைக்க ப்பட்டுள்ளது.

மமிதா பைஜு கதாநாயகியாக நடித்துள்ள இந்தப் படத்தில், கே.எஸ். ரவிகுமார், கருணாஸ், ஜெயராம், சுராஜ் வெஞ்சரமூடு, எம்.எஸ். பாஸ்கர் உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இசையை ஜி.வி.பிரகாஷ் அமைத்துள்ள நிலையில், ஒளிப்பதிவை தேனி ஈஸ்வர் மேற்கொண்டுள்ளார்.

வேல்ஸ் இன்டர்நேஷனல் பிலிம்ஸ் தயாரிப்பில் உருவான இந்த படம் நாளை திரையரங்குகளில் வெளியாக உள்ளது. இதற்குமுன்னதாகவே, படத்தை பார்த்த மாரி செல்வராஜ் தனது பாராட்டுகளை வெளிப்படுத்தியுள்ளார்.

அவருடைய பதிவில், 'கர' எனக்கு மிகச் சிறந்த திரை அனுபவமாக இருந்தது. சிலிர்ப்பு, நெகிழ்வு, சிந்தனை, விறுவிறுப்பு அனைத்தையும் ஒரே நேரத்தில் உணர வைத்த ஒரு நம்பிக்கையான படம். தனுஷ் அவர்களின் நடிப்பு, திரையில் ஒரு ஆழமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது என அவர் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார். மேலும், சமூக உணர்வுகளையும் கதையின் உணர்ச்சியையும் இணைத்து சொல்லும் விதத்தில் 'கர' தனித்துவம் பெறும் என அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். மேலும் இந்த படம் ஒடிசாவில் நடைபெற்ற சம்பவத்தை பிரதிபலிக்கும் காட்சியாக காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளார் இந்த பாராட்டு, படத்திற்கான எதிர்பார்ப்பை மேலும் உயர்த்தியுள்ளது.



## சினிமா

க்ரித்தி ஷெட்டி அழகிய உடையில் எடுத்திருக்கும் போட்டோஷூட் ஸ்டில்களை வெளியிட்டுள்ளார். அது ரசிகர்களைக் கவர்ந்து லைக்குகள் குவிந்து வருகிறது.

# நாலு படத்துல டான்ஸ் ஆடுன ஜட்ஜா போட்டுடுவாங்க.! வனிதாவின் அதிரடி பேட்டி



விஜயகுமார் மஞ்சுளா தம்பதியின் மகளான வனிதா, விஜய்யுடன் நடித்த 'சந்திரலேகா' படத்தின் மூலம் ஆரம்ப காலத்தில் கவனம் பெற்றவர். பின்னர் 90களில் சில படங்களில் ஹீரோயினாக நடித்தார்.

மேலும், படத்தில் 'சிவராத்திரி' பாடல் பயன்படுத்தப்பட்டதற்காக இசையமைப்பாளர் இளையராஜா வழக்கு தொடர்ந்தார். ஓடிடியில் வெளியாகாத நிலையில், வனிதா தனது படத்தை யூடியூப் சேனலில் வெளியிட்டார்.

இந்த நிலையில், சமீபத்திய பேட்டி ஒன்றில் கருத்து தெரிவித்த வனிதா, மறைமுகமாக நடிகை ஒருவரை தாக்கி பேசியதாக சமூக வலைத்தளங்களில் விமர்சனங்கள் எழுந்து வருகின்றன. அதன்படி அவர் கூறுகையில்,

இப்போ இருக்குற ஷோக்கள்ல எல்லாம் சம்பந்தமே இல்லாதவங்க ஜட்ஜா இருக்காங்க. பாட்டு ஷோனா பாடகர்களையும், டான்ஸ் ஷோனா டான்ஸ் மாஸ்டர்கள் அல்லது ஷோபனா மாதிரி சாதிச்சவங்களையும் தான் கூப்பிடணும்.

ஆனா, சம்பந்தமே இல்லாம நாலு படத்துல டான்ஸ் ஆடுன சினிமாக்காரங்களை ஜட்ஜா போடுறாங்க. நீங்க ஒரு CHEF ஆக இருந்தா மட்டும்தான் சமையல் ஷோவுக்கு ஜட்ஜா இருக்கணும்.


ஆனா அப்படி இல்லாதவங்களை கூட்டிட்டு வந்து உட்கார வைக்கிறாங்க. இந்த கான்செப்ட்டே எனக்கு புரியல என தெரிவித்துள்ளார்.

குக் வித் கோமாளி நிகழ்ச்சியில் தற்போது நடிகை ரோஜா களமிறங்கி உள்ள நிலையில், வனிதாவின் இந்த கருத்து வைரலாகி வருகிறது.


ULTRA SEC FACILITY FORCE
YOUR SAFETY, OUR COMMITMENT
OUR SERVICES
Security Services
(Trained Security Guards, Supervisors, 24x7 Coverage)
Facility Management Services
(Housekeeping, Maintenance, Cleaning)
Manpower Supply
(Skilled & Unskilled Stafffor Industries, Apartments, Offices
WHY CHOOSE US?
Experienced & Professional Team
24/7 Reliable Support
Affordable & Transparent Pricing
Customized Service Plans
ULTRA SEC FACILITY FORCE
Flat No : 13A, Door No: 1, Moovarasampet Main Road, Madipakkam, Chennai-600091.
+91 93632 98980
ultrasecfacility@gmail.com
www.ultrasecfacility.com


ADVERTISE WITH US
CONTACT US
9438610756


ePAPER
ePAPER PUBLISHING
WEBSITE / SOFTWARE
Publish | Manage | Deliver
Complete Solution for ePaper Publishing
Daily ePaper
Archive Management
Subscription & Free Access
Google Ads Integration
Upload PDF & Publish
Mark, Crop, Cut & Share
Share on Social Media
COMPLETE ePAPER WEBSITE / SOFTWARE
FOR JUST
₹2999/-
PER YEAR
UPLOAD, MARK, CROP, CUT & SHARE
HOSTING Included
ADMIN PANEL Included
MEMBER PANEL Included
ALL ESSENTIAL FEATURES
CALL / WHATSAPP:
9040463899


ADVERTISE
WITH US
7789941009


TOURS & TRAVELS AGENCY
WEBSITE / SOFTWARE
BOOK | MANAGE | GROW
All-in-One Solution to Grow Your Travel Business Online
COMPLETE TOURS & TRAVELS AGENCY WEBSITE
FOR JUST
₹2999/-
PER YEAR
HOSTING Included
ADMIN PANEL Included
MEMBER PANEL Included
ALL ESSENTIAL FEATURES
PROFESSIONAL DESIGN
EASY TO MANAGE
SECURE & RELIABLE
GROW YOUR BUSINESS
CALL / WHATSAPP:
9040463899


REAL ESTATE AGENT
WEBSITE / SOFTWARE
LIST | SHOWCASE | CONNECT | GROW
Everything You Need to Grow Your Real Estate Business Online
COMPLETE REAL ESTATE WEBSITE / SOFTWARE
FOR JUST
₹2999/-
PER YEAR
HOSTING Included
ADMIN PANEL Included
MEMBER PANEL Included
ALL ESSENTIAL FEATURES
PROFESSIONAL DESIGN
EASY TO MANAGE
SECURE & RELIABLE
BOOST YOUR BUSINESS
CALL / WHATSAPP
9040463899


CRYPTO BASED
MLM WEBSITES
PROFESSIONAL • SECURE • POWERFUL
FOR
Rs. 25000/-
ONLY
CRYPTO MLM
ANY MLM CRYPTO PLAN
Decentralised
ROI Plans
Helping Plans
Level Plans
Binary Plans
Compensation Plans
Generation Plans
and Many More...
SECURE & RELIABLE
DECENTRALISED PLATFORM
GROW YOUR BUSINESS
FREE SUPPORT & UPDATES
Call/Whatsapp:
7436914247


JOB PLACEMENT AGENCY
WEBSITE / SOFTWARE
CONNECTING TALENT, CREATING OPPORTUNITIES
COMPLETE JOB PLACEMENT AGENCY WEBSITE
FOR JUST
₹2999/-
PER YEAR
HOSTING Included
ADMIN PANEL Included
MEMBER PANEL Included
ALL ESSENTIAL FEATURES
PROFESSIONAL DESIGN
EASY TO MANAGE
SECURE & RELIABLE
GROW YOUR BUSINESS
CALL / WHATSAPP
9040463899


LIVE
NEWS PORTAL
WEBSITE
/ SOFTWARE
FAST | RELIABLE | DYNAMIC
Powerful Solution for Digital News & Media Business
COMPLETE NEWS PORTAL WEBSITE
FOR JUST
₹2999/-
PER YEAR
HOSTING Included
ADMIN PANEL Included
MEMBER PANEL Included
ALL ESSENTIAL FEATURES
PROFESSIONAL DESIGN
EASY TO MANAGE
SECURE & RELIABLE
GROW YOUR AUDIENCE
CALL / WHATSAPP:
9040463899


WANTED
ELECTRICIAN SUPERVISOR
/
ELECTRICIAN
EGMORE, MOUNT ROAD
CALL US
7550093245 / 7358696451


Vilambaram
WE HELP YOU TO BOOST YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM
CONTACT: 8122798599

# பெங்களூருவில் கனமழை: மருத்துவமனை சுவர் இடிந்து விழுந்து 7 பேர் பலி



**பெங்களூரு, மே 1:**

பெங்களூருவில் பெய்த அதீத கனமழை மற்றும் பலத்த காற்று காரணமாக, சிவாஜிநகர் பகுதியில் உள்ள பவுரிங் மற்றும் லேடி கர்சன் மருத்துவமனையின் சுற்றுச்சுவர் இடிந்து விழுந்ததில் 7 பேர் உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மழையிலிருந்து தப்பிக்க சுவரின்ஓரமாகஒதுங்கியிருந்த நடைபாதை வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் மீது சுவர் இடிந்து விழுந்ததாக கூறப்படுகிறது. இதில் சம்பவ இடத்திலேயே 7 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். பலியானவர்களில் 3 குழந்தைகளும் அடங்குவர்.

மேலும், இந்த விபத்தில் 7 பேர் காயமடைந்துள்ளனர். அவர்கள் அருகிலுள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சம்பவம் குறித்து தகவல் அறிந்த உடனே மீட்புப் படையினர் மற்றும் போலீசார் விரைந்து வந்து மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர். இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்கும் பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டன.

இந்தவிபத்தில்உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.5 லட்சம் நிதியுதவி வழங்கப்படும் என கர்நாடக முதல்-மந்திரி சித்தராமையா அறிவித்துள்ளார்.


மேலும், துணை முதல்-மந்திரி டி.கே. சிவக்குமார் மற்றும் முதல்-மந்திரி சித்தராமையா ஆகியோர் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டனர். காயமடைந்தவர்களுக்கு சிறந்த சிகிச்சை வழங்கவும், மீட்புப் பணிகளை விரைவு படுத்தவும் அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

# லடாக்கில் மிதமான நிலநடுக்கம்

**லடாக், மே 1:**

*லடாக்கில் மிதமான நிலநடுக்கம் பதிவானதாக தேசிய நிலநடுக்கவியல் ஆய்வு மையம் வியாழக்கிழமை காலை தெரிவித்துள்ளது.*

*லே பகுதியை மையமாகக் கொண்டு பதிவான இந்த நிலநடுக்கம், ரிக்டர் அளவுகோலில் 4.1 ஆகப் பதிவாகியுள்ளது.*




*இதுதொடர்பாக தேசிய நிலநடுக்கவியல் ஆய்வு மையம் வெளியிட்ட அறிக்கையில், வியாழக்கிழமை அதிகாலை 3.54 மணியளவில் லே, லடாக் பகுதியில் 150 கி.மீ. ஆழத்தில் பதிவாகியிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*லே சுற்றுப்புறங்களில் சில பகுதிகளில் இந்த நிலநடுக்கத்தால் லேசான அதிர்வுகள் ஏற்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இருப்பினும், சேதம் குறித்த உடனடித் தகவல்கள் எதுவும் இதுவரை பதிவாகவில்லை.*

# தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக் கணிப்பு: மே.வங்கம், அசாமில் பாஜக அணி வெற்றி பெறும்

**புதுடெல்லி, மே 1:**

*தேர்தலுக்கு பிந்தைய கருத்துக் கணிப்பில் அசாம், மேற்கு வங்கத்தில் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியும் கேரளாவில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணியும் (யுடிஎப்) வெற்றி பெறும் என தெரியவந்துள்ளது.*

*கேரளாவில் உள்ள 140 சட்டப்பேரவை தொகுதிகளுக்கும், அசாம் மாநிலத்தில் உள்ள 126 சட்டப்பேரவை தொகுதிகளுக்கும் கடந்த 9-ம் தேதி தேர்தல் நடைபெற்றது. மேற்கு வங்கத்தில் கடந்த 23-ம் தேதி முதல் கட்ட தேர்தலும், நேற்று 2-ம் கட்ட தேர்தலும் நடைபெற்றது.*

*இந்நிலையில் தேர்தலுக்கு பிந்தைய கருத்துக் கணிப்புகள் நேற்று வெளியாயின. ஆக்சிஸ் மை இந்தியா நிறுவனம் வெளியிட்ட கருத்துக் கணிப்பில் கேரளாவில் காங். தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி 78 முதல் 90 இடங்களை கைப்பற்றும் எனவும், மார்க்சிஸ்ட் தலைமையிலான இடது ஜனநாயக முன்னணி (எல்டிஎப்) 49 முதல் 62 இடங்களை கைப்பற்றும் எனவும், பாஜக 3 இடங்களை கைப்பற்றும் எனவும் தெரிவித்துள்ளது.*

*பீப்பிள்ஸ் இன்சைட் நிறுவனம் வெளியிட்ட கருத்துக் கணிப்பில் யுடிஎப் 66 முதல் 76 இடங்களையும், எல்டிஎப் 58 முதல் 68 இடங்களையும் கைப்பற்றும் என தெரிவித்துள்ளது. பீப்பிள்ஸ் பல்ஸ் நிறுவனம் வெளியிட்ட கருத்துக்கணிப்பில் யுடிஎப் 75 முதல் 85 இடங்களையும், எல்டிஎப் 55 முதல் 65 இடங்களையும் கைப்பற்றும் எனவும் பாஜக 3 இடங்களை கைப்பற்றலாம் எனவும் தெரிவித்துள்ளது.*

*ஆக்சிஸ் மை இந்தியா நடத்திய கருத்துக் கணிப்பில் அசாம் மாநிலத்தில் பாஜக 88 முதல் 100 இடங்களில் வெற்றி பெறும் எனவும், காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி 24 - 36 இடங்களில் வெற்றி பெறும் எனவும் தெரிவித்துள்ளது.*

*மேட்ரிஸ் நிறுவனம் வெளியிட்ட கருத்துக் கணிப்பில் பாஜக அணி 85 முதல் 95 இடங்களையும், காங்கிரஸ் தலைமையிலான அணி 25 முதல் 32 இடங்களை கைப்பற்றும் என தெரிவித்துள்ளது.*

*பீப்பிள்ஸ் இன்சைட் நிறுவனம் வெளியிட்ட கருத்துக் கணிப்பில் பாஜக அணி 88 முதல் 96 இடங்களையும், காங்கிரஸ் தலைமையிலான அணி 15 முதல் 26 இடங்களையும் கைப்பற்றும் என தெரிவித்துள்ளது.*

*மேட்ரிஸ் நிறுவனம் வெளியிட்ட கருத்துக் கணிப்பில் மேற்கு வங்கத்தில் பாஜக 146 முதல் 161 இடங்களையும், திரிணமூல் காங்கிரஸ் 125 முதல் 140 இடங்களையும் கைப்பற்றும் என தெரிவித்துள்ளது. பி-மார்க் நிறுவனம் வெளியிட்ட கருத்துக் கணிப்பில் பாஜக அணி 150 முதல் 175 இடங்களையும், திரிணமூல் காங்கிரஸ் 118 முதல் 138 இடங்களையும் கைப்பற்றும் என தெரிவித்துள்ளது. பீப்பிள்ஸ் பல்ஸ் நிறுவனம் வெளியிட்ட கருத்துக் கணிப்பில் திரிணமூல் காங்கிரஸ் 177 முதல் 187 இடங்களையும், பாஜக அணி 95 முதல் 110 இடங்களை கைப்பற்றும் என தெரிவித்துள்ளது.*

**கேரளா மொத்தம் (140)**

| | யுடிஎப் | எல்டிஎப் | பாஜக |
|---|---|---|---|
| ஆக்சிஸ் மை இண்டியா | 78-90 | 49-62 | 0-3 |
| பீப்பிள்ஸ் பல்ஸ் | 75-85 | 55-65 | 0-3 |
| வோட் வைப் | 70-80 | 58-68 | 0-4 |
| பீப்பிள் இன்சைட் | 66-76 | 58-68 | 10-14 |

**மேற்கு வங்கம் (மொத்தம் 294)**

| | டிஎம்சி | பாஜக | பிறர் |
|---|---|---|---|
| போல் டைரி | 99-127 | 142-171 | 5-9 |
| மேட்ரிஸ் | 125-140 | 146-161 | 6-10 |
| பி-மார்க் | 118-138 | 150-175 | 2-6 |
| பிரஜா போல் | 85-110 | 178-208 | 0-5 |
| ஜன்மத் போல்ஸ் | 195-205 | 80-90 | 4-9 |
| பீப்பிள்ஸ் பல்ஸ் | 177-187 | 95-110 | 1-4 |

**அசாம் (மொத்தம்126)**

| | பாஜக | காங். | பிறர் |
|---|---|---|---|
| போல் டைரி | 86-101 | 15-26 | 0 |
| ஜேவிசி | 88-101 | 23-33 | 2-5 |
| ஆக்சிஸ் மை இண்டியா | 88-100 | 24-36 | 0-3 |
| ஜன்மத் போல்ஸ் | 87-98 | 29-30 | |
| பீப்பிள்ஸ் இன்சைட் | 88-96 | 30-34 | 2-4 |
| காமாக்யா அனலிடிக்ஸ் | 85-95 | 26-39 | 0-3 |
| மேட்ரிஸ் | 85-95 | 25-32 | 6-12 |

# தெலங்கானா ஏரிக்கரையில் சிதறி கிடந்த ரூ.500 கள்ள நோட்டுகள்

**கம்மம், மே 1:**

கம்மம்: தெலங்கானா மாநிலம் கம்மம் மாவட்டம், லச்சாபுரத்தில் உள்ள ஏரிக்கரையில், நேற்று அதிகாலை 500 ரூபாய் நோட்டுகள் நாலா புறமும் சிதறி கிடந்தன. இதனை பார்த்த அப்பகுதியினர் ஆச்சரியப்பட்டனர்.

இது குறித்து லச்சாபுரம் போலீஸாருக்கு தகவல் எட்டியது. உடனே போலீஸார் சம்பவ இடத்திற்கு சென்று அங்கு சிதறி கிடந்த சுமார் 30 ஆயிரம் மதிப்புள்ள 500 ரூபாய் நோட்டுகளை சேகரித்து சோதித்து பார்த்தனர். அப்போது அவை அனைத்துமே கள்ள நோட்டு கள் என்பது தெரியவந்தது. யாரோ கள்ள நோட்டுகளை மாற்ற பயந்து, இங்குள்ள ஏரிக்கரையில் வீசி விட்டு சென்றுள்ளனர் என போலீஸார் கருதுகின்றனர். இது குறித்து போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# வெறுப்புப் பேச்சுகளுக்கு எதிரான மனுக்கள்: உச்சநீதிமன்றம் தள்ளுபடி

**புதுடெல்லி, மே 1:**

நாட்டில் அதிகரித்து வரும் வெறுப்புப் பேச்சுகளைத் தடுக்க உத்தரவு பிறப்பிக்க வலியுறுத்தி தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீது உச்சநீதிமன்ற நீதிபதிகள் விக்ரம் நாத், சந்தீப் மேத்தா ஆகியோா் அடங்கிய அமா்வு புதன்கிழமை தீா்ப்பளித்தது.

அப்போது நீதிபதிகள் அமா்வு கூறியதாவது: குற்றங்களுக்குத் தண்டனையை நிா்ணயிப்பது என்பது முழுமையாக நாடாளுமன்ற அதிகார வரம்புக்குள்பட்டதாகும். பிஎன்எஸ்எஸ் சட்டத்தின் கீழ் அமைந்துள்ள சட்ட ரீதியான கட்டமைப்பு, குற்றவியல் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான விரிவான வழிமுறையை அளிக்கிறது. இதில் சட்டரீதியாக எந்த வெற்றிடமும் இல்லை.

வெறுப்புப்பேச்சுக்கு எதிராகசட்டம் இயற்றும் அதிகாரம் நீதிமன்றங்களிடம் இல்லை. நாடாளுமன்றத்திடம்தான் உள்ளது. அதிகபட்சமாக சீா்திருத்தத்தின் அவசியத்தை நீதிமன்றம் சுட்டிக்காட்டலாம். ஆனால் சட்டம் இயற்றுவதா? வேண்டாமா? அவ்வாறு சட்டம் இயற்றுவதாக இருந்தால், அதை எவ்வகையில் இயற்றுவது என்பது குறித்த முடிவு நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டப்பேரவைகளின் தனிப்பட்ட அதிகார வரம்புக்குள்பட்டதாகும்.

கட்டாயப்படுத்த முடியாது: அரசியல் சாசன நீதிமன்றங்கள் சட்டம் குறித்து தெளிவுரை வழங்கலாமே தவிர, சட்டம் இயற்ற வேண்டும் என்று கட்டாயப்படுத்த முடியாது. மேலும் ஏற்கெனவே உள்ள குற்றவியல் சட்டங்களின் கீழ், வெறுப்புப் பேச்சு தொடா்பான குற்றங்கள் மீது நடவடிக்கை எடுக்க வழியுள்ளது. வெறுப்புப் பேச்சுக்கு எதிராக அந்தச் சட்டங்களே போதுமானவையாக உள்ளன என்று தெரிவித்தது.

எனினும் மாறிவரும் சமூகச் சூழல்களின் பின்னணியில், வெறுப்புப் பேச்சுகளைத் தடுக்க புதிய சட்டம் ஏதேனும் அவசியமா என்பதை பரிசீலிக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு அறிவுறுத்திய நீதிபதிகள் அமா்வு, மனுக்களை தள்ளுபடி செய்தது.

# பஞ்சாப் சரக்கு ரயில் வழித் தடங்களில் 'ட்ரோன்' மூலம் கண்காணிப்பு: ரயில்வே அமைச்சகம்

**புதுடெல்லி, மே 1:**



பஞ்சாபில் பிரத்யேக சரக்கு ரயில் வழித் தடத்தில் கடந்த 3 மாதங்களில் 2 வெடி தாக்குதல்கள் நிகழ்ந்துள்ள நிலையில், இந்த வழித்தடங்களை ஆளில்லா விமானங்கள் மூலமும் கண்காணிப்பை தீவிரப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது என்று ரயில்வே இணையமைச்சா் ரவ்னீத் சிங் பிட்டு தெரிவித்தாா். மேலும், 'இந்த ரயில் பாதைகளில் 24 மணி நேரமும் ரோந்துப் பணியும் மேற்கொள்ளப்படும்' என்றும் அவா் தெரிவித்தாா்.

இந்த ரயில் வழித் தடத்தில் செவ்வாய்க்கிழமை வெடிச் சம்பவம் நிகழ்ந்த பகுதியை புதன்கிழமை பாா்வையிட்ட பிறகு, இந்தத் தகவலை அவா் தெரிவித்தாா்.

ஞ்சாப் மாநிலம் பாட்டியாலாவில் ஷாம்பு பகுதியில் செல்லும் பிரத்யேக சரக்கு ரயில் வழித் தடத்தை, பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐஎஸ்ஐ ஆதரவு பெற்ற காலிஸ்தான் பயங்கரவாத அமைப்புடன் தொடா்புடைய நபா்கள் வெடி வைத்து தகா்க்கும் முயற்சியில் செவ்வாய்க்கிழமை ஈடுபட்டனா். ஆனால், அந்த வெடிமருந்து முன்கூட்டியே வெடித்ததால், அதை எடுத்துவந்த நபா் சம்பவ இடத்திலேயே உடல் சிதறி உயிரிழந்தாா். ரயில் பாதைக்கு பெரிய அளவில் சேதம் ஏற்படவில்லை. சம்பவ இடத்திலிருந்து மீட்கப்பட்ட கைப்பேசி சிம்காா்டில் மேற்கொண்ட ஆய்வு மற்றும் கண்காணிப்பு கேமரா பதிவுகளை ஆய்வு செய்ததன் அடிப்படையில், இந்த சதித் திட்டத்தைத் தீட்டிய முக்கிய குற்றவாளியான பிரதீப் கல்சாதான் உள்பட நால்வரை பஞ்சாப் போலீஸாா் கைது செய்தனா்.

வெடிச் சம்பவம் நிகழ்ந்த ரயல் வழித் தட பகுதியை புதன்கிழமை ஆய்வு செய்த மத்திய அமைச்சா் ரவ்னீத் சிங் பிட்டு, பின்னா் செய்தியாளா்களிடம் கூறியதாவது:

கிழக்கு பிரத்யேக சரக்கு ரயில் வழித் தடத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்த விரிவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த வழித் தடத்தில் 24 மணி நேர ரோந்துப் பணி அமல்படுத்தப்பட உள்ளது. பஞ்சாபில் இந்த வழித் தடத்தில் ஏற்கெனவே 173 கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ள நிலையில், மேலும் அதிக இடங்களில் கண்காணிபபு கேமராக்கள் பொருத்தும் பணி நடைபெற்று வருகிறது.

ஆளில்லா விமானங்களில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தி கண்காணிப்பது உள்பட நவீன கண்காணிப்பு முறைகள் மூலம் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட உள்ளது. சூரிய சக்தியில் செயல்படும் கேமராக்களும் பொருத்தப்பட்டு வருகின்றன என்றாா்.

# மேலும் 12 நாடுகளுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள்– பியூஷ் கோயல் தகவல்

**புதுடெல்லி, மே 1:**

*மேற்காசிய போரால் எழுந்துள்ள சவால்களுக்கு மத்தியிலும் இம்மாதத்தின் முதல் மூன்று வாரங்களில் ஏற்றுமதி அதிகரித்துள்ளதாக அவா் குறிப்பிட்டாா்.*

*இது தொடா்பாக தில்லியில் செய்தியாளா்களுக்கு புதன்கிழமை அளித்த பேட்டியில் பியூஷ் கோயல் கூறியதாவது:*

*ஐக்கிய அரபு அமீரகம், பிரிட்டன், ஐரோப்பிய யூனியன், 4 ஐரோப்பிய நாடுகளை உள்ளடக்கிய ஐரோப்பிய தடையற்ற வா்த்தக கூட்டமைப்பு, ஆஸ்திரேலியா, மோரீஷஸ், ஓமன், நியூஸிலாந்து ஆகிய நாடுகளுடன் இந்தியா தடையற்ற வா்த்தக ஒப்பந்தங்களில் கையொப்பமிட்டுள்ளது. இந்த ஒப்பந்தங்கள், உள்நாட்டு தொழில்துறைக்கு மிகப் பெரிய உத்வேகத்தை அளித்துள்ளன.*

*கடந்த நிதியாண்டை ஒப்பிடுகையில், நடப்பு ஏப்ரல் மாதத்தின் முதல் 3 வாரங்களில் நாட்டின் ஏற்றுமதி அதிகரித்துள்ளது. மேற்காசிய போரால் எழுந்துள்ள சவால்களுக்கு மத்தியிலும் இந்த அதிகரிப்பு பதிவாகியுள்ளது.*

*மத்திய கிழக்கு பிராந்தியத்துக்கான முக்கிய வழித்தடமான ஹோா்முஸ் நீரிணையில் தொடா்ந்து சவாலான சூழல் நிலவுவதால், பிற வழித்தடங்கள் வழியாக சரக்கு போக்குவரத்து மேற்கொள்ளப்படுகிறது.*

*அமெரிக்கா உடனான வா்த்தக ஒப்பந்தத்தைப் பொருத்தவரை, கடந்த வாரம் ஆக்கபூா்வ பேச்சுவாா்த்தை நடத்தப்பட்டது. தொடா்ந்து பேச்சுவாா்த்தை நடத்தப்படும்.*

*அண்டை நாடுகள் மற்றும் ரஷியாவுடன் இந்தியா தடையற்ற வா்த்தக ஒப்பந்த பேச்சுவாா்த்தை மேற்கொண்டுவருகிறது. அதன்படி, மேலும் 12 ஒப்பந்தங்கள் தயாராகி வருகின்றன. நாட்டில் அந்நிய நேரடி முதலீடு அதிகரித்து வருகிறது. இது, 88 பில்லியன் டாலரை எட்டும் என்றாா் அவா்.*

*புவி-அரசியல் பதற்றங்கள் மற்றும் வா்த்தகஸ்திரமின்மையால் கடந்த மாா்ச்சில் சரக்கு ஏற்றுமதி 7.44 சதவீதம் குறைந்து, முந்தைய 5 மாதங்களில் இல்லாத அளவில் 38.92 பில்லியன் டாலராக சரிந்தது.*

# பேஸ்புக் விளம்பரத்தை நம்பி ரூ.12 லட்சத்தை இழந்த பெண்




**பெங்களூரு, மே 1:**

வெளிநாட்டிற்கு சுற்றுலா செல்லத் திட்டமிட்டு, சமூக வலைதள விளம்பரத்தை நம்பிய பெங்களூருவைச் சேர்ந்த பெண் ஒருவர், சுமார் 12 லட்ச ரூபாய் பணத்தைபறிகொடுத்துள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பெங்களூருவில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் 33 வயது பெண், ஐரோப்பிய நாடுகளுக்கு சுற்றுலா செல்ல விரும்பியுள்ளார். இதற்காக பேஸ்புக்கில் உள்ள ஒரு பயணப் பக்கத்தை (TRAVEL PAGE) அணுகியுள்ளார். அங்கிருந்த கவர்ச்சிகரமான விளம்பரங்களைப் பார்த்து, அவர்களின் மூலம் பயணத்தைத்திட்டமிட முடிவு செய்துள்ளார்.

அவர்கள் அந்தப் பெண்ணிடம் விசா, விமான டிக்கெட்டுகள் மற்றும் அங்கு தங்குவதற்கான இடங்கள் எனப் பல காரணங்களைக் கூறி, பல்வேறு தவணைகளில் மொத்தம் ரூ. 12,77,000 வசூலித்துள்ளனர். பணம் முழுவதையும் செலுத்திய பிறகு, திடீரென அந்தப் பயணப் பக்கத்தின் நிர்வாகம் தொழில்நுட்பக் காரணங்களால் "ட்ரிப் ரத்து"செய்யப்படுவதாகத் தெரிவித்துள்ளது.

அந்தப் பெண் தனது பணத்தைத் திரும்பக் கேட்டபோது, வெறும் ரூ. 1.18 லட்சத்தை மட்டும் திருப்பி அளித்துள்ளனர். மீதமுள்ள சுமார் 11.59 லட்ச ரூபாயை வழங்க மறுத்து, அவரைத் தொடர்புகொள்ள முடியாதபடி ஏமாற்றியுள்ளனர்.

தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த அந்தப் பெண், உடனடியாக பெங்களூரு சைபர் கிரைம் போலீசில் புகார் அளித்தார். புகாரைப் பெற்றுக்கொண்ட போலீசார், தற்போது வழக்குப்பதிவு செய்து மோசடியில் ஈடுபட்ட நபர்களின் வங்கிகணக்குகள் மற்றும் பேஸ்புக் பக்கத்தின் பின்னணி குறித்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# இந்தியா விலைவாசி உயர்வுக்கான சவாலை சந்திக்கும் - மத்திய நிதி அமைச்சகம்

**புதுடெல்லி, மே 1:**




மத்திய நிதி அமைச்சகம் வெளியிட்டுள்ள மாதாந்திர பொருளாதார அறிக்கையில், ஈரான் போர் பதற்றம் எதிரொலியாக இந்தியப் பொருளாதாரத்தில் பணவீக்க அபாயத்தைஏற்படுத்தக்கூடும் என்று எச்சரித்துள்ளது. இந்த அறிக்கையின் இடம்பெற்றுள்ள முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:-

ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான போர் மற்றும் போர் பதற்றம் காரணமாக எரிசக்தி மற்றும் உரங்களின் வினியோகம் பாதிக்கப்படலாம். இது பொருட்களின் விலையை உயர்த்தி பணவீக்கத்தை அதிகரிக்க வாய்ப்புள்ளது. கடல்வழி வணிகத் தடைகள் மற்றும் போர் சூழலால் சர்வதேச வர்த்தகம் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது.

சர்வதேச அளவில் நெருக்கடி இருந்தாலும், இந்தியாவின் உள்நாட்டு பலம் பொருளாதாரத்தைப் பாதுகாக்கும். உள்நாட்டிலேயே பொருட்களுக்கான தேவை அதிகமாக இருப்பது வெளிநாட்டுப் பாதிப்புகளைக் குறைக்க உதவும். விவசாயிகளைப் பாதுகாக்க, எதிர்வரும் காரீப் பருவத்துக்கான (சித்திரைபட்டம்) உர மானியத்தை அரசு 12 சதவீதம் அதிகரித்துள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.




# கரூரில் மூதாட்டியை கொன்று நகைகளை கொள்ளையடித்த இளைஞர் சென்ட்ரல் ரயில் நிலையத்தில் கைது

**சென்னை, மே.01:** கரூரில் மூதாட்டியை கொன்று, நகைகளை திருடி ரயிலில் தப்பிய இளைஞர் சென்னை சென்ட்ரலில் ரயில்வே போலீஸார் கைது செய்தனர்.

கரூர் மாவட்டம், வெள்ளியணை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட சாலைப்பட்டியில் தனியாக வசித்து வந்தவர் தாயாரம்மாள் (79). கடந்த 26-ம் தேதி, திண்டுக்கல் மாவட்டம், குஜிலியம்பாறை லந்தக்கோட்டையில் வசிக்கும் தனது மகள் மனோரஞ்சிதத்துடன் செல்போனில் பேசிவிட்டு, திண்ணையில் கட்டிலில் படுத்து தூங்கினார்.

மறுநாள் காலை, மூதாட்டியின் உறவினர் அருணாச்சலம் அந்த வழியாக சென்றார். அதிகாலை 4 மணிக்கே எழுந்து வீட்டு வேலைகளை செய்யும் தாயாரம்மாள் காலை 6.45 மணி ஆகியும் எழாததால் சந்தேகம் அடைந்தார்.

இதையடுத்து, வீட்டு வாசல் கேட்டை திறந்து உள்ளே சென்று பார்த்தபோது, கை, கால்கள், வாய் ஆகியவை துணியால் கட்டப்பட்டு இறந்த நிலையில் தாயாரம்மாள் கிடந்தார்.

இதுகுறித்து, தாயாரம்மாளின் மகள் மனோரஞ்சிதத்துக்கு அருணாச்சலம் தகவல் தெரிவித்தார். மனோரஞ்சிதம் சாலப்பட்டிக்கு விரைந்து வந்து, தாயாரின் சடலத்தை பார்த்து அதிர்ச்சியடைந்தார்.

மேலும், அவர் அணிந்திருந்த அரை சவரன் தோடு மற்றும் கால் சவரன் மூக்குத்தி ஆகியவற்றை காணவில்லை. இந்த கொலை தொடர்பாக மனோரஞ்சிதம், வெள்ளியானை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்.


இதன்பேரில், போலீஸார் தீவிர விசாரணை நடத்தி, செல்போன் சிக்னல்களை ஆய்வு செய்ததில் மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றத்தை சேர்ந்த பாண்டீஸ்வரன் (19) என்பவர் தான் கொலை செய்து விட்டு தப்பியது தெரிந்தது.

அவரது செல்போன் எண்ணை ஆய்வு செய்த போது, கேரள மாநிலம் ஆலப்புழாவில் இருந்து, ஜார்கண்ட் மாநிலம் தன்பாத் செல்லும் விரைவு ரயிலில் பயணம் செய்வது தெரிய வந்தது.

இதையடுத்து, கரூர் மாவட்ட போலீஸார், சென்னை சென்ட்ரல் ரயில்வே போலீஸாருக்கு தகவல் அளித்தனர். அதன்பேரில், தன்பாத் விரைவு ரயில் நேற்றுமுன்தினம் இரவு 10 மணிக்கு சென்ட்ரலுக்கு வந்தவுடன், உரிய அடையாளம் மற்றும் போட்டோவை வைத்து, பாண்டீஸ்வரனை ரயில்வே போலீஸார் கைது செய்தனர்.

தொடர்ந்து, வெள்ளியணை போலீஸாருக்கு தகவல் தெரிவித்தனர். சென்னைக்கு விரைந்த வெள்ளியணை போலீஸார், கொலையாளி பாண்டீஸ்வரனை கைது செய்து விசாரணைக்காக கரூர் அழைத்துச் சென்றனர்.

# ரூ.15 லட்சத்தை மர்ம நபர்கள் திருடியதாக நாடகமாடியவர் கைது



**சென்னை, மே.01:** ஆடு விற்ற பணம் ரூ.15 லட்சத்தை மர்ம நபர்கள் திருடிவிட்டதாக முதலாளியிடம் நாடகமாடிய ஓட்டுநர் கைது செய்யப்பட்டார்.

சென்னை, பழைய வண்ணாரப்பேட்டையைச் சேர்ந்தவர் தாஜுதீன் (54). ராஜஸ்தானில் இருந்து மொத்தமாக ஆடுகளை வாங்கி, தமிழகம் முழுவதும் வியாபாரிகளிடம் விற்பனை செய்து வருகிறார்.

கோடம்பாக்கம், ட்ரஸ்ட்புரத்தைச் சேர்ந்த சம்பத் (50) என்பவர் இவரிடம் ஓட்டுநராகப் பணியாற்றுகிறார். இந்நிலையில், திருப்பத்தூர் மாவட்டம் நாட்றாம்பள்ளியில் உள்ள வியாபாரியிடம் 73 ஆடுகளை கொடுத்துவிட்டு, அதற்கான பணத்தை வாங்கி வருமாறு சம்பத்தை தாஜுதீன் கடந்த 25-ம் தேதி இரவு அனுப்பி வைத்தார்.

அதன்படி, லோடு வண்டியில் ஆடுகளை ஏற்றிச் சென்று மறுநாள் காலை அந்த வியாபாரியிடம் ஒப்படைத்த சம்பத், அதற்கான பணம் ரூ.14.63 லட்சத்தை வாங்கிக் கொண்டு சென்னைக்கு திரும்பிக் கொண்டிருந்தார்.

மதுரவாயலை நெருங்கிய நிலையில், மயக்கம் வருவதுபோல உணர்ந்த சம்பத், வண்டியை ஓரமாக நிறுத்தியுள்ளார். சிறிது நேரம் கழித்து எழுந்த அவர், பணத்தைக் காணாமல் திடுக்கிட்டார்.

முதலாளியை செல்போனில் தொடர்பு கொண்ட அவர், "உடல் சோர்வு காரணமாக மயக்கமடைந்து விட்டேன். பைக்கில் வந்த 2 பேர் கவனித்து, முகத்தில் தண்ணீர் தெளித்து எழுப்பினர். அவர்கள் போன பிறகுதான், பணம் திருடுபோனதை கவனித்தேன்" என்று கூறியுள்ளார்.

இதுகுறித்து, மதுரவாயல் காவல் நிலையத்தில் தாஜுதீன் புகார் கொடுத்தார். முதல் கட்டமாக, சம்பத்திடம் போலீஸார் விசாரித்தனர். அவர் முன்னுக்குப் பின் முரணாக பேசியதால், சம்பவ இடத்தில் உள்ள கண்காணிப்பு கேமரா பதிவுகளை ஆய்வு செய்தனர்.

அதில், சம்பத் கூறியதுபோல எந்த சம்பவமும் நடக்கவில்லை என்பது தெரிய வந்தது. இதையடுத்து, சம்பத்தின் வீட்டில் சோதனை நடத்திய போலீஸார், மறைத்து வைக்கப்பட்டிருந்த ரூ.14.63 லட்சத்தை கைப்பற்றினர்.

பணத்தை அபகரிக்கும் நோக்கில், மயக்கம் வந்ததாக கூறி நாடகமாடியதை சம்பத் ஒப்புக்கொண்டார். அவரை போலீஸார் கைது செய்தனர்.

# ஆதார், பான் எண்ணைத் திருடி நூதன மோசடி: ரூ.4.70 கோடி ஜிஎஸ்டி செலுத்துமாறு ஓட்டுநருக்கு நோட்டீஸ்

**சென்னை, மே.01:** ஜிஎஸ்டி ரூ.4.70 கோடி செலுத்த வேண்டும் என்று நோட்டீஸ் வந்ததால் கார் ஓட்டுநர் அதிர்ச்சி அடைந்தார். வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர் கார் ஓட்டுநர் கமலநாதன் (36).

கடந்த 10 ஆண்டுகளாக திருவேற்காடு அடுத்த புளியம்பேடு நூம்பல் பகுதியில் மனைவி, 2 குழந்தைகளுடன் வசித்து வருகிறார். இந்நிலையில், வேலூரில் உள்ள அவரது சொந்த வீட்டு முகவரிக்கு கடந்த பிப்ரவரி மாதம் ஜிஎஸ்டி அலுவலகத்தில் இருந்து ஒரு கடிதம் வந்துள்ளது.

அதில், 'கமலநாதன் ரூ.4.70 கோடி ஜிஎஸ்டி வரி செலுத்த வேண்டும்' என குறிப்பிடப்பட்டிருந்தது. இதைக் கண்டு அதிர்ச்சியடைந்த அவர் உடனடியாக ஜிஎஸ்டி அலுவலகத்தை அணுகி விளக்கம் கேட்டுள்ளார்.

அடையாளம் தெரியாத நபர்ஒருவர் கமலநாதனின் ஆதார், பான் அட்டை விவரங்களை பயன்படுத்தி அவரது பெயரில் ஜிஎஸ்டி பதிவு செய்து, ஓசூர், திருப்பூரில் நிறுவனம் தொடங்கி தொழில் செய்து வந்துள்ளார்.

திருப்பூரில் கமல் என்டர்பிரைஸ் என்ற பெயரில் ஏற்றுமதி - இறக்குமதி நிறுவனம் நடத்தி வந்ததாகவும், பின்னர் அதை நிறுத்திவிட்டதும் தெரியவந்தது.

இதையடுத்து, ஜிஎஸ்டி அலுவலக அதிகாரிகள் மற்றும் அதைத் தொடர்ந்து, வானகரம் போலீஸார் அறிவுறுத்தியபடி, சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் கமலநாதன் நேற்று புகார் கொடுத்தார்.

பின்னர், செய்தியாளர்களிடம் அவர் கூறியபோது, "ரூ.4.70 கோடி ஜிஎஸ்டி வரி கட்ட வேண்டும் என்று எனக்கு நோட்டீஸ் வந்துள்ளது.

எனது ஆதார், பான் விவரங்களைத் திருடி மோசடியில் ஈடுபட்டவர்

# திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் சித்திரை பிரம்மோற்சவ விழா: கொடியேற்றத்துடன் நாளை தொடக்கம்

**சென்னை, மே.01:** திருவல்லிக்கேணி பார்த்தசாரதி பெருமாள் கோயிலில் ஆண்டு தோறும் சித்திரை மாத பிரம்மோற்சவ விழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்படும்.



அந்த வகையில், இந்த ஆண்டுக்கான பிரம்மோற்சவ விழா நாளை (மே 1) கொடியேற்றத்துடன் தொடங்குகிறது. இதையொட்டி புஷ்பப் பல்லக்கு சேவை நேற்று இரவு நடைபெற்றது.

பல்வேறு வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்ட பல்லக்கில் எழுந்தருளிய எம்பெருமானை திரளான பக்தர்கள் தரிசித்து பரவசமடைந்தனர். தொடர்ந்து இன்று (30-ம் தேதி) அங்குரார்ப்பணம் எனும் முளையிடுதல் விழா நடக்கிறது.

மே 1-ம் தேதி (நாளை) கொடியேற்றத்துடன் பிரம்மோற்சவம் தொடங்குகிறது. தொடர்ந்து, தினமும் பல்வேறு வாகனங்களில் சுவாமி வீதி உலா நடக்கிறது.

பிரம்மோற்சவத்தின் முக்கிய நிகழ்வான தேரோட்டம் 7-ம் தேதி நடைபெறுகிறது. 8-ம் தேதி பல்லக்கில் வெண்ணெய் தாழி கண்ணன் திருக்கோலத்தில் சுவாமி புறப்பாடு நடைபெறுகிறது.

9-ம் தேதி காலை 6.15 மணிக்கு ஆளும் பல்லக்கு, காலை 11 மணிக்கு தீர்த்த வாரி நடக்கிறது.

அன்று இரவு கொடியிறக்க நிகழ்வு நடைபெறும். 10-ம் தேதி இரவு 10 மணிக்கு சிறிய திருத்தேர் நிகழ்வுடன் விழா நிறைவடைகிறது.

# தீ விபத்தால் பாதிக்கப்பட்ட குழந்தையை காப்பாற்றிய அரசு மருத்துவர்கள்

**சென்னை, மே.01:** தீ விபத்தால் பாதிக்கப்பட்ட பச்சிளம் குழந்தையை சென்னை எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனை மருத்துவர்கள் காப்பாற்றினர்.



இதுதொடர்பாக, சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை டீன் சாந்தாராமன், மருத்துவக் கண்காணிப்பாளர் பாஸ்கர், எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனை இயக்குநர் மதிவாணன் ஆகியோர் கூறியதாவது: சென்னை புரசைவாக்கத்தில் உள்ள அரசு மகப்பேறு மருத்துவமனையில் கடந்த மாதம் தனலட்சுமி என்ற பெண்ணுக்கு ஆண் குழந்தை பிறந்தது.

மருத்துவமனையில் இருந்த ஒரு உபகரணத்தில் மின் கசிவால் ஏற்பட்ட தீ விபத்தால், குழந்தையின் உடலில் 23 சதவீதம் தீக்காயம் ஏற்பட்டது.

இதையடுத்து, குழந்தை மேல்சிகிச்சைக்காக சென்னை எழும்பூரில் உள்ள அரசு குழந்தைகள் நல மருத்துவமனையில் சேர்க்கப்பட்டது.

அப்போது, குழந்தையின் உடலில் சூடு குறைந்து போயிருந்தது. நாடி மெலிதாக துடித்துக் கொண்டிருந்தது.

துரிதமாக செயல்பட்ட மருத்துவக் குழுவினர், உடனே குழந்தையின் உடலில் ஏற்பட்டிருந்த காயத்தை சுத்தப்படுத்தி, திசு சிகிச்சையும் மேற்கொண்டனர்.

இதன் பிறகு, 4 நாட்களுக்கு தீவிர சிகிச்சை பிரிவில் செயற்கை சுவாசத்தில் குழந்தை வைக்கப்பட்டது. தீக்காயத்தில் கிருமித் தொற்று இருந்ததால் ஆன்டிபயாடிக் மருந்துகள் தொடர்ந்து 14 நாட்கள் செலுத்தப்பட்டன.

இதற்கிடையே, 3-ம் நாளில் குழாய் மூலம் குழந்தைக்கு தாய்ப்பாலும் கொடுக்கப்பட்டது. பின்னர், படிப்படியாக பாலாடை வழியாகவும், நேரடியாகவும் தாய்ப்பால் கொடுக்கப்பட்டது. தினமும் காயத்தை சுத்தப்படுத்தி தொடர் சிகிச்சை அளிக்கப்பட்டது.

24 நாட்களில் குழந்தை முழுமையாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளது. குழந்தையின் உயிரைக் காப்பாற்றிய மருத்துவர்களுக்கு பெற்றோர் கண்ணீர் மல்க நன்றி தெரிவித்தனர். இவ்வாறு அவர்கள் கூறினர்.

# வாக்கு எண்ணிக்கையை முன்னிட்டு மே 2 முதல் மறுஉத்தரவு வரும் வரை போலீஸாருக்கு விடுப்பு கிடையாது

**சென்னை, மே.01:** சட்டப்பேரவை தேர்தல் வாக்கு எண்ணிக்கை பாதுகாப்புப் பணியை முன்னிட்டு மே 2 முதல் மறு உத்தரவு வரும் வரை போலீஸாருக்கு விடுப்பு கிடையாது என டிஜிபி சந்தீப் ராய் ரத்தோர் உத்தரவிட்டுள்ளார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் வாக்குப்பதிவு கடந்த 23-ம் தேதி நடைபெற்றது. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், சென்னையில் 3 வாக்கு எண்ணும் மையங்கள் உள்பட தமிழகம் முழுவதும் 62 வாக்கு எண்ணும் மையங்களில் பத்திரமாக வைக்கப்பட்டுள்ளன.

இந்த மையங்களில் தமிழக காவல் துறையினர், துணை ராணுவப்படையினர் என 4 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. மே 4-ம் தேதி காலை 8 மணி முதல் வாக்கு எண்ணும் பணி நடைபெற உள்ளது.

தமிழகத்தில் திமுக, அதிமுக-பாஜக, தவெக, நாம் தமிழர் என 4 முனை போட்டி நிலவுகிறது. அன்றைய தினம், வெற்றி பெறுபவர்கள் கொண்டாட்டத்திலும், தோல்வி அடைபவர்கள் ஏமாற்றமும் அடைவார்கள். இதனால் தொண்டர்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டு, சட்டம் ஒழுங்கில் பிரச்சினை வந்துவிடக்கூடாது என்பதற்காக பாதுகாப்பு முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளை டிஜிபி சந்தீப் ராய் ரத்தோர் தீவிரப்படுத்தி வருகிறார்.

அதன் ஒரு பகுதியாக அனைத்து மாவட்ட போலீஸாருக்கும் சுற்றறிக்கை அனுப்பி உள்ளார். அதில், "சட்டப்பேரவை தேர்தல் வாக்கு எண்ணிக்கை மே 4-ம் தேதி நடைபெறுகிறது. அன்றைய தினம் அதிகளவு போலீஸார் களப்பணியாற்ற வேண்டியுள்ளது.

எனவே, 2-ம் தேதி முதல் மறு உத்தரவு வரும் வரை காவலர்கள் முதல் அதிகாரிகள் வரையாரும் விடுப்பு எடுக்கக் கூடாது.

மகப்பேறு, குழந்தை பராமரிப்பு, படிப்பு, அவசர காலம் மற்றும் மருத்துவ விடுப்பு எடுத்துக் கொள்ளலாம். விடுமுறையில் இருப்பவர்கள் 2-ம் தேதிக்குள் பணிக்கு திரும்ப வேண்டும்" என டிஜிபி தெரிவித்துள்ளார்.

# பணியிடத்தில் இளம்பெண்ணுக்கு பாலியல் தொல்லை: கடை உரிமையாளர் மீது வழக்குப்பதிவு

**தூத்துக்குடி, மே.01:** தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளத்தை சேர்ந்த முத்துக்குமார், அந்த பகுதியில் உள்ள புதிய பேருந்து நிலையம் அருகே ஆம்னி பேருந்து முன்பதிவு செய்யும் கடை நடத்தி வருகிறார். இவரது கடையில் 25 வயதுடைய பெண் ஒருவர் வேலை பார்த்து வருகிறார்.

கடந்த 26-ம் தேதி மதியம், கடையில் உள்ள தனி அறையில் வைத்து அந்த பெண்ணிடம் முத்துக்குமார் பாலியல் ரீதியாக தவறாக நடக்க முயன்றுள்ளார். அப்போது அந்த பெண் சத்தமிட்டதைத் தொடர்ந்து, அருகில் இருந்தவர்கள் அங்கு திரண்டனர். உடனே முத்துக்குமார், இந்த சம்பவம் குறித்து வெளியே சொன்னால் கொலை செய்துவிடுவதாக அந்த பெண்ணிற்கு மிரட்டல் விடுத்துவிட்டு தப்பியோடினார்.

இதுகுறித்து பாதிக்கப்பட்ட பெண் சாத்தான்குளம் காவல் நிலையத்தில் அளித்த புகாரின் அடிப்படையில் போலீசார் வழக்குப்பதிவு செய்து, விசாரணை மேற்கொண்டு, முத்துக்குமாரை தேடி வருகின்றனர்.

# கொச்சி-தூத்துக்குடி: இயற்கை எரிவாயு குழாய் அமைக்கும் திட்டத்துக்கு அனுமதி; வீடுகளுக்கு தடையின்றி கியாஸ் கிடைக்கும்




**நாகர்கோவில், மே.01:** கொச்சி முதல் தூத்துக்குடி வரை கன்னியாகுமரி மாவட்டம் வழியாக இயற்கை எரிவாயு குழாய் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் வீடுகளுக்கு தடையின்றி கியாஸ் கிடைக்கும் எனற தகவல் வெளியாகியுள்ளது.

ஈரான்-அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இடையேயான மோதலால் ஹார்முஸ் நீர்சந்தி மூடப்பட்டது. இதனால் சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயு வினியோக சங்கிலி அறுந்தது. இதன் தாக்கம் எங்கோ இருக்கும் நாடுகளை தாண்டி இந்தியாவின் குக்கிராமத்து அடுப்பங்கரை வரை எதிரொலித்தது.

சிலிண்டர் தட்டுப்பாட்டால் ஏற்பட்ட பாதிப்புகள் ஏராளம். வீட்டு தேவையை அரசு பூர்த்தி செய்து விட்டது. ஆனால் வணிக பயன்பாட்டிற்கான சிலிண்டர்களுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டது. ஒரு சிலிண்டரை ரூ.7,000 கொடுத்து வாங்க வேண்டிய நிலைக்கு உணவக உரிமையாளர்கள் தள்ளப்பட்டனர். இந்த இக்கட்டான நிலையை புரிந்துகொண்ட மத்திய அரசு, மக்கள் இயற்கை எரிவாயுவுக்கு (பி.என்.ஜி.) மாற வேண்டும் என அறிவுறுத்தியது.

ஆனால் தற்போது நாட்டின் பெருநகரங்களில் மட்டுமே இந்த வசதி உள்ளது. எனவே இதை விரிவுபடுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. அதன் ஒரு பகுதியாக, பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு ஒழுங்குமுறை வாரியம், இந்திய ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்துக்கு ஒரு முக்கிய அங்கீகாரத்தை வழங்கியுள்ளது. அதாவது கொச்சியில் தொடங்கி கன்னியாகுமரி மாவட்டம் வழியாக தூத்துக்குடி வரை இயற்கை எரிவாயு (மீத்தேன்) குழாய்களை அமைக்கவும், அவற்றை இயக்கவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டம் கே.டி.பி.எல். (கொச்சி-கன்னியாகுமரி-தூத்துக்குடி குழாய்) என்று அழைக்கப்படுகிறது. இதற்கான ஏலம் முடிந்து, கடந்த மார்ச் 9-ம் தேதி அங்கீகார கடிதம் வழங்கப்பட்டது. மார்ச் 19-ம் தேதி இந்திய ஆயில் கார்ப்பரேஷன் தனது ஏற்பு கடிதத்தை சமர்ப்பித்தது.

இந்த திட்டத்தின் கீழ் குழாய் இணைப்பானது கொச்சி எல்.என்.ஜி. முனையத்தில் இருந்து தூத்துக்குடி வரை மொத்தம் 424.65 கி.மீ. தூரம் அமைக்கப்படும். ஒவ்வொரு பகுதியின் மண் தன்மைக்கு ஏற்ப 16, 14, 12.75 மற்றும் 8.625 அங்குல விட்டம் கொண்ட குழாய்கள் பதிக்கப்படும். நாள் ஒன்றுக்கு 68.40 லட்சம் மெட்ரிக் ஸ்டாண்டர்ட் கியூபிக் மீட்டர் எரிவாயு வழங்கும் வகையில் அமைக்கப்பட உள்ளது. தொழிற்சாலைகளுக்கான எரிபொருள் மற்றும் வீடுகளுக்கான கியாஸ் இதன் மூலம் தடையின்றி கிடைக்கும். இந்த ஒப்பந்தத்தில் இந்திய ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் சார்பில் முதன்மை பொது மேலாளர் யோஹான்குமார் மற்றும் பெட்ரோலியம் மற்றும் இயற்கைஎரிவாயு ஒழுங்குமுறை வாரியம் சார்பில் செயலாளர் அஞ்சன்குமார்மிஸ்ரா ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர்.

# இலவச மின்சாரத்துக்கு ரூ.17,300 கோடி மானியம்: தமிழக அரசுக்கு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் உத்தரவு

**சென்னை, மே.01:** தமிழகத்தில் வீடுகள், விவசாயம், கைத்தறி மற்றும் பல்வேறு பிரிவுகளுக்கு இலவச மற்றும் மானிய விலையில் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.



இப்போதுள்ள நடைமுறைப்படி, வீடுகளுக்கு முதல் 100 யூனிட் மின்சாரம் இலவசமாகவும், 500 யூனிட் வரை மானிய விலையிலும் வழங்கப்பட்டு வருகிறது. அதேநேரம், விவசாய இணைப்புகள் மற்றும் குடிசை வீடுகளுக்கு மின்சாரம் முழுமையாக இலவசமாக வழங்கப்படுகிறது.

இதுதவிர, விசைத்தறிகள் மற்றும் வழிபாட்டுத் தலங்கள் போன்ற சில குறிப்பிட்ட வகை மின் இணைப்புகளுக்கும் அரசு மானிய விலையிலேயே மின்சாரத்தை விநியோகம் செய்கிறது.

இவ்வாறு பல்வேறு பிரிவினருக்கு சலுகை விலையில் மின்சாரம் வழங்குவதால் மின் வாரியத்துக்கு ஏற்படும் நிதிச் சுமையை ஈடுகட்ட, ஆண்டு தோறும் அரசு மானியத் தொகையை வழங்க வேண்டும்.

இந்த மானியத் தொகையை எவ்வளவு வழங்க வேண்டும் என்பதை மின்சார ஒழுங்குமுறை ஆணையமே ஆய்வு செய்து நிர்ணயம் செய்கிறது. அதன்படி, 2026-27-ம் நிதியாண்டுக்காக, வீடு உள்ளிட்ட மொத்தம் 14 பிரிவுகளின் கீழ் ரூ.17,307 கோடி அரசு வழங்க வேண்டும் என ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

இதில், வீடுகளுக்கான மின்பயன்பாட்டுக்கு மட்டும் அதிகபட்சமாக ரூ.8,428 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த முழுத் தொகையையும் 4 காலாண்டுகளாக பிரித்து, ஒவ்வொரு காலாண்டுக்கும் தனித்தனி தவணைகளாக மின் வாரியத்திடம் அரசு ஒப்படைக்க வேண்டும் என்றும் உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சுங்குவார்சத்திரம் அருகே மின்சாரம் தாக்கி 2 கல்லூரி மாணவர்கள் உயிரிழப்பு!!

**காஞ்சிபுரம், மே.01:** சுங்குவார்சத்திரம் அருகே சிறுமாங்காடு கிராமத்தில் பனை மரத்தில் நுங்கு பறிக்கும் போது மின் மாற்றியில் சிக்கிய நுங்கை, இரும்புக் கம்பி கொண்டு எடுத்த கல்லூரி மாணவர்கள் இருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அதே கிராமத்தைச் சேர்ந்த டில்லி கணேஷ் (17), தட்சிணாமூர்த்தி (17) இருவரின் உடலைக் கைப்பற்றிய போலீசார் பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பவானிசாகர் அணையில் இருந்து கீழ்பவானி பாசனத்திற்கு நீர் திறப்பு குறைப்பு



ஈரோடு , கரூர், திருப்பூர் மாவட்ட மக்களின் குடிநீர் ஆதாரமாகவும், 2.47 லட்சம் விளை நிலங்களின் வாழ்வாதாரமாகவும் உள்ளது பவானிசாகர் அணை. 105 அடி கொள்ளளவு கொண்ட பவானிசாகர் அணையின் முக்கிய நீர் பிடிப்பு பகுதியாக நீலகிரி மலைப்பகுதி இருந்து வருகிறது.

கடந்த சில நாட்களாக பவானிசாகர் அணைக்கு நீர் வரத்து குறைந்து வருகிறது. அதேநேரம் பாசனத்துக்கு நீர்வரத்தை விட அதிக அளவில் தொடர்ந்து நீர் வெளியேற்றப்பட்டு வருவதால் அணையின் நீர்மட்டம் வேகமாக குறைந்து வருகிறது.

இன்று காலை நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 62.32 அடியாக சரிந்துள்ளது. இன்று காலை அணைக்கு 168 கன அடியாக நீர்வரத்து வந்து கொண்டிருக்கிறது. பவானிசாகர் அணையில் இருந்து கீழ்பவானி வாய்க்கால் பாசனத்திற்கு ஆயிரம் கன அடி நீர் திறப்பு குறைக்கப்பட்டுள்ளது. தடப்பள்ளி-அரக்கன்கோட்டை பாசனத்திற்கு 700 கன அடியும், பவானி ஆற்றுக்கு 200 கன அடி நீர் என மொத்தம் பாசனத்திற்காக 1,900 கனஅடி நீர் திறக்கப்பட்டுள்ளது.

குண்டேரி பள்ளம் அணையின் நீர்மட்டம் இன்று காலை நிலவரப்படி 30.73 அடியாக உள்ளது. பெரும்பள்ளம் அணையின் நீர்மட்டம் இன்று காலை நிலவரப்படி 24.21 அடியாக சரிந்துள்ளது. இதே போல் வரட்டுபள்ளம் அணையின் நீர்மட்டம் 20.60 அடியாக சரிந்துள்ளது.

ஈரோடு மாவட்ட அணைகளின் நீர்பிடிப்பு பகுதியில் மழைப்பொழிவு இல்லாததால் தொடர்ந்து அணைகளின் நீர்மட்டம் சரிந்து வருவது விவசாயிகளை கவலை அடைய செய்துள்ளது.

# தமிழ்நாட்டில் 1,351 ஏரிகள் வறண்டன- சிவகங்கை மாவட்டத்தில் அதிகபட்சமாக 380 ஏரிகளில் தண்ணீர் இல்லை

**சென்னை, மே.01:** தமிழ்நாட்டில் வெயிலின் தாக்கம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. திருச்சி, மதுரை, வேலூர், தர்மபுரி உள்பட பல்வேறு நகரங்களில் 100 டிகிரியை தாண்டி வெயில் சுட்டெரிக்கிறது.

இதன் காரணமாக ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏரிகளில்உள்ள தண்ணீர் வறண்டு வருகின்றன. தமிழ்நாட்டில் நீர்வளத்துறை பராமரிப்பில் 14 ஆயிரத்து 141 ஏரிகள் உள்ளன.

இவற்றின் மூலம் பாசனம், குடிநீர் உள்ளிட்ட தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது. தற்போது நிலவும் கடும் வெயில் காரணமாக மாநிலம் முழுவதும் 1,351 ஏரிகள் முற்றிலும் வறண்டு விட்டன.

இதில் அதிகபட்சமாக சிவகங்கை மாவட்டத்தில் 380 ஏரிகள் தண்ணீர் இன்றி வறண்டு கிடக்கின்றன. மதுரையில் 264 ஏரிகள், திண்டுக்கல் மாவட்டத்தில் 129 ஏரிகள் வறண்டுவிட்டன. திருநெல்வேலி மாவட்டத்தில் 84 ஏரிகள், திருச்சியில் 82 ஏரிகள், நாமக்கல்லில் 53 ஏரிகள், தேனியில் 50 ஏரி கள், சேலத்தில் 42 ஏரிகள் வறண்டுவிட்டன.

கத்திரி வெயில்தொடங்குவதற்கு முன்பே வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் தமிழ்நாட்டில் மேலும் பல ஏரிகள் வறண்டு போகும் வாய்ப்பு நிலவுகிறது. நீர்வளத்துறையில் முக்கிய ஏரிகள் வறண்டு வருவதால் பல மாவட்டங்களில் பாசனம், குடிநீர் உள்ளட்ட தேவைகளை பூர்த்தி செய்வதில் இனிமேல் சிக்கல் ஏற்படும் என தெரிகிறது.

மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளை ஒட்டியுள்ள மாவட்டங்களில் உள்ள ஏரிகள் வறண்டு வரும் சூழ்நிலை உருவாகி வருவதால், பறவைகள் வனவிலங்குகளுக்கு தண்ணீர் கிடைக்காத நிலை உருவாகிவிடும் என சமூக ஆர்வலர்கள் கவலை அடைந்துள்ளனர்.

## திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 6 கிராமங்களுக்கு மீண்டும் வாக்குப்பதிவு நடத்தக் கோரிய வழக்கு தள்ளுபடி!

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள ஆர். பாலகுறிச்சி, ஆர்.சீகம்பட்டி, ரெகுநாதபட்டி, வைரன்பட்டி, கோபால்பட்டி உள்ளிட்ட ஆறு கிராமங்கள், சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதியுடன் சேர்க்கப்பட்டுள்ளன.

கடந்த ஏப்ரல் 23-ந்தேதி நடத்த தேர்தலில், இந்த கிராம மக்கள் யாரும் வாக்களிக்கவில்லை. இதனால், இந்த கிராமங்களில் வாக்குப்பதிவு நடத்தக் கோரி, பாலக்குறிச்சியை சேர்ந்த பா.ஜ.க பிரமுகர் லட்சுமணன் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவில், "திருப்பத்தூர் தொகுதியில் தங்கள் கிராமத்தை சேர்த்துள்ளதால், நிர்வாக உதவிகள் கிடைப்பதில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும், ஆறு கிராமங்களை புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தொகுதியில் சேர்க்க கோரி, பல ஆண்டுகளாக மனுக்கள் அளித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இந்த தேர்தலில் ஆறு கிராமங்களை சேர்ந்த 2,012 வாக்காளர்கள் வாக்களிக்கவில்லைஎன்பதால், இந்த ஆறு கிராமங்களுக்கும் மீண்டும் வாக்குப் பதிவு நடத்த வேண்டும்" எனக் கூறியிருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி, நீதிபதி ஜி. அருள்முருகன் அமர்வு, தேர்தலின் போது இந்த ஆறு கிராம மக்களை வாக்களிக்க விடாமல் யாரும் தடுக்கவில்லை. தேர்தல் முடிந்த பிறகு எப்படி வாக்களிக்க அனுமதிக்க முடியும்? என கேள்வி எழுப்பி, இந்த வழக்கு செல்லதக்கதல்ல எனக் கூறி, தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

# அஞ்சலகங்களில் ஞாயிற்றுக்கிழமை ஆதார் சேவை செயல்படும்: தூத்துக்குடி கோட்ட கண்காணிப்பாளர் தகவல்

**தூத்துக்குடி, மே.01:** தூத்துக்குடி முதுநிலை அஞ்சல் கோட்ட கண்காணிப்பாளர் செந்தில்குமார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தூத்துக்குடி தலைமை அஞ்சலகத்தில் ஆதார் சேவை வழங்கப்பட்டு வருகிறது. தற்போது பொதுமக்களின் கூடுதல் வசதிக்காக வார நாட்களில் காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரையும், ஞாயிற்றுக்கிழமை காலை 9:30 மணி முதல் மாலை 5:30 மணி வரையும் ஆதார் சேவை மையம் செயல்படும்.

வேலைக்கு செல்பவர்களின் வசதிக்காகவும், கோடை விடுமுறையில் பள்ளி செல்லும் குழந்தைகள் தங்கள் ஆதாரில் திருத்தங்களை மேற்கொள்வதற்கும் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தலைமை அஞ்சலகம் தவிர, தூத்துக்குடி கோட்டத்தைச் சேர்ந்த கீழ்க்காணும் அஞ்சலகங்களிலும் ஆதார் பதிவு மற்றும் திருத்த சேவைகள் வழங்கப்படுகின்றன:

ஆழ்வார்திருநகரி, ஆறுமுகநேரி, ஆத்தூர், சிதம்பரநகர், ஏரல், காயல்பட்டினம், குலசேகரப்பட்டணம், குரும்பூர், மெஞ்ஞானபுரம், மேலூர், முதலூர், மூக்குப்பீறி, நாசரேத், ஓட்டப்பிடாரம், பரமன்குறிச்சி, புதுக்கோட்டை,சாத்தான்குளம், சாயர்புரம், செய்துங்கநல்லூர், உடன்குடி கிறிஸ்தியானகரம், வல்லநாடு, முத்தையாபுரம், ஆனந்தபுரம், காயாமொழி, கொம்மடிக்கோட்டை, மில்லர்புரம், முடிவைத்தானேந்தல், புதியம்புத்தூர் மற்றும் படுக்கப்பத்து.

கட்டண விவரங்கள்:

புதிய ஆதார் பதிவு: இலவசம். 5 முதல் 7 வயது மற்றும் 15 முதல் 17 வயது குழந்தைகளுக்கு செய்யப்படும் கைரேகை/கருவிழிப் புதுப்பித்தல் முற்றிலும் இலவசம். பெயர், முகவரி, வயது, மின்னஞ்சல் மற்றும் தொலைபேசி எண் திருத்தங்களுக்கு ரூ.75 கட்டணம் வசூலிக்கப்படும். புகைப்படம், கைரேகை, கருவிழி ஆகியவற்றை புதுப்பிக்க ரூ.125 கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அரசின் நலத்திட்டங்களுக்கு விண்ணப்பிக்க புதுப்பிக்கப்பட்ட ஆதார் அவசியம் என்பதால், பொதுமக்கள் தங்களுக்கு அருகிலுள்ள அஞ்சலக ஆதார் மையங்களை அணுகி பயன்பெறலாம்.

இவ்வாறு அவர் தெரவித்துள்ளார்.

# மெட்ரோ ரெயில் பயண அட்டை இன்று முதல் செல்லாது- சிங்கார சென்னை அட்டைக்கு மாற்றம்




சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம், மெட்ரோ ரெயில்களில் பயணம்செய்ய சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் பயண அட்டையுடன் கூடுதலாக "சிங்கார சென்னை அட்டையை (தேசிய பொது போக்கு வரத்து அட்டை)" அறிமுகப்படுத்தியது.

இந்தியா முழுவதும் உள்ள பொதுப்போக்குவரத்துச் சேவைகளில் தடையற்ற பயணத்தை உறுதி செய்யும் வகையில் நாளை (1-ந்தேதி) முதல் சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் "சிங்கார சென்னை அட்டைக்கு (தேசிய பொது போக்குவரத்து அட்டை)" முழுமையாக மாற திட்டமிட்டுள்ளது. எனவே மெட்ரோ ரெயில் பயண அட்டை இன்று முதல் செல்லாது. இது தொடர்பாக ஏற்கனவே மெட்ரோ ரெயில் நிறுவனம் பயணிகள் தேசிய பொது போக்குவரத்து அட்டைக்கு மாற்றிக்கொள்ளுமாறு அறிவிப்பு வெளியிட்டு இருந்தது குறிப்பிடத்தக்கது.

# தமிழகத்தில் வாக்கு எண்ணிக்கை நாளில் பலத்த பாதுகாப்புக்கு ஏற்பாடு- 1 லட்சம் போலீசார் தீவிர கண்காணிப்பு



**சென்னை,மே.01:** தமிழகத்தில் கடந்த 23-ந்தேதி நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலில் பதிவான வாக்குகள் வருகிற 4-ந்தேதி எண்ணப்படுகிறது. தேர்தல் களத்தில் எப்போதும் இல்லாத வகையில் கடும் போட்டி நிலவிய நிலையில் நேற்று மாலையில் வெளியான கருத்துக் கணிப்புகளும் குழப்பத்தை ஏற்படுத்தி உள்ளன.

தமிழகம் முழுவதும் 62 மையங்களில் வாக்குகள் எண்ணப்படுகின்றன. தேர்தல் முடிவுகள் வெளியாவதற்கு இன்னும் 3 நாட்கள் மட்டுமே இருக்கும் நிலையில் பலத்த பாதுகாப்புக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன.

அனைத்து மாவட்டங்களிலும் போலீசார் உஷார்படுத்தப்பட்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டு இருக்கிறது. இவர்களுடன் வாக்கு எண்ணும் மையங்களில் துணை ராணுவ படையினரும் கண்காணிப்பு பணியில் ஈடுபட இருக்கிறார்கள்.

சென்னை மற்றும் புறநகர் தொகுதிகள் திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டங்களிலும் வாக்கு எண்ணும் மையங்களில் போலீஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டு உள்ளது.

சென்னையில் ராணி மேரி கல்லூரி, நுங்கம்பாக்கம் லயோலா கல்லூரி, கிண்டி அண்ணா பல்கலைக்கழகம் ஆகிய 3 இடங்களில் வாக்குப்பதிவு எந்திரங்கள் பலத்த பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. ராணி மேரி கல்லூரியில் ஆர்.கே.நகர், திரு.வி.க.நகர், ராயபுரம், துறைமுகம், சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி ஆகிய 5 தொகுதிகளில் பதிவான வாக்கு எந்திரங்கள் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

கிண்டி அண்ணா பல்கலைக்கழகத்தில் விருகம்பாக்கம், சைதாப்பேட்டை, தி.நகர், மயிலாப்பூர், வேளச்சேரி ஆகிய தொகுதிகளில் பதிவான வாக்கு எந்திரங்களும், நுங்கம்பாக்கம் லயோலா கல்லூரியில் பெரம்பூர், கொளத்தூர், வில்லிவாக்கம், எழும்பூர், ஆயிரம் விளக்கு, அண்ணாநகர் ஆகிய தொகுதிகளில் பதிவான வாக்குப்பதிவு எந்திரங்களும் பத்திரமாக வைக்கப்பட்டு உள்ளன.

தமிழகம் முழுவதும் வாக்கு எண்ணிக்கை நடைபெறும் மே 4-ந்தேதி அன்று ஒரு லட்சம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ள நிலையில் சென்னையில் 20 ஆயிரம் போலீசார் 3 ஷிப்டுகளாக பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளனர். வாக்கு எண்ணும் மையங்களில் இரவு-பகலாக போலீசார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வருகிறார்கள். 62 வாக்கு எண்ணும் மையங்களும் மத்திய பாதுகாப்புப் படை மற்றும் தமிழக போலீசாரின் முழு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டு பாதுகாப்பு ஏற்பாடுகள் முழுமையாக செய்யப்பட்டு உள்ளது.




# தேர்தலுக்கு பிந்தைய கருத்து கணிப்பு: முடிவுகள் வெவ்வேறாக இருப்பதால் தலை சுற்றலில் அரசியல் தலைவர்கள்!



**சென்னை, மே.01:** தமிழகத்தில் கடந்த 23-ந் தேதி (வியாழக்கிழமை) 17-வது சட்டசபை தேர்தல் நடந்து முடிந்திருக்கிறது. இந்தத் தேர்தலுடன் மேற்கு வங்க மாநிலத்தில் உள்ள 152 தொகுதிகளுக்கு முதற்கட்ட வாக்குப்பதிவு நடந்த நிலையில், நேற்று (29-ந்தேதி) மீதமுள்ள 142 தொகுதிகளுக்கு 2-வது கட்ட வாக்குப்பதிவு நடந்தது.

ஏற்கனவே, புதுச்சேரி, கேரளா, அசாம் ஆகிய மாநிலங்களுக்கு கடந்த 9-ந் தேதி ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடந்து முடிந்திருக்கிறது. இந்த நிலையில், தமிழகம் உள்பட 5 மாநில சட்டசபை தேர்தல்களில் பதிவான வாக்குகள் மே மாதம் 4-ந் தேதி (திங்கட்கிழமை) எண்ணப்பட இருக்கின்றன.

தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட மார்ச் 15-ந் தேதி சமயத்தில் வெளியான கருத்து கணிப்புகளில், தமிழகத்தில் தி.மு.க. கூட்டணி மீண்டும் ஆட்சி அமைக்கும் என்று தகவல்கள் வெளியாகின.

ஆனால், தேர்தல் தேதி நெருங்கும் சமயத்தில் வெளியான கருத்து கணிப்புகளில், அ.தி.மு.க. கூட்டணி வெற்றி பெறும் என்று கூறப்பட்டன. தமிழக அரசின் உளவுத்துறையும் அ.தி.மு.க. கூட்டணி வெற்றி பெறும் என்று அரசுக்கு அறிக்கை கொடுத்ததாக தகவல் வெளியானது.

தேர்தலுக்கு பிந்தைய கருத்து கணிப்பு

ஆனால், வாக்குப்பதிவு நாளான 23-ந் தேதி, வாக்களித்தவர்களை வைத்து பார்க்கும்போது, த.வெ.க.வுக்கு அதிக வாக்குகள் பதிவாகியிருக்கலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இந்த நிலையில், மேற்கு வங்காளத்தில் நேற்று 2-வது கட்ட வாக்குப்பதிவு நிறைவடைந்த நிலையில், வாக்குப்பதிவுக்கு பிந்தைய கருத்து கணிப்பு முடிவுகள் 5 மாநிலங்களுக்கும் வெளியாகின.

வெவ்வேறு முடிவுகள்

இந்த கருத்து கணிப்பு முடிவுகள் வெவ்வேறாக இருந்ததால், அரசியல் தலைவர்கள் தலை சுற்றலில் இருந்து வருகிறார்கள். என்.டி.டி.வி. - பீப்பிள்ஸ் பல்ஸ், மேட்ரிஸ், ரிபப்ளிக் பி மார்க், சாணக்கியா ஸ்ட்ராட்டஜிஸ், மும்பை சட்டபஜார், அக்னி, மின்னம்பலம் ஆகிய 7 நிறுவனங்கள், ஆளுங்கட்சியான தி.மு.க.வே மீண்டும் ஆட்சி அமைக்கும் என்று தெரிவித்துள்ளன.

அதே நேரத்தில், வோட் வைப், ஜே.வி.சி. - டைம்ஸ் நவ், சி.என்.என். - நியூஸ் 18 ஆகிய 3 நிறுவனங்கள் அ.தி.மு.க. ஆட்சியை பிடிக்கும் என்று தெரிவித்துள்ளன. ஆனால், இந்தியா டுடே - ஆக்சிஸ் மை இந்தியா தமிழக வெற்றிக் கழகம் ஆட்சியை பிடிக்கும் என்று கருத்து கணிப்பு வெளியிட்டுள்ளது.

தலைவர்களுக்கு தலை சுற்றல்

இப்படி, தேர்தலுக்கு பிந்தைய கருத்து கணிப்பு முடிவுகள் வெவ்வேறாக இருப்பதால், "ஆட்சியை பிடிப்போம்" என்ற நம்பிக்கையில் உள்ள அரசியல் தலைவர்கள் தலை சுற்றலில் உள்ளனர். ஆனால், தேர்தலுக்கு பிந்தைய கருத்து கணிப்பு முடிவுகள் வெளியானதில், தி.மு.க. முன்னிலையில் இருப்பதால், அக்கட்சி நிர்வாகிகள் "வெற்றி நமதே" என்று நம்பிக்கையுடன் உள்ளனர்.

அதே நேரத்தில், எதிர்க்கட்சியான அ.தி.மு.க. நிர்வாகிகளும், புதிய வரவான த.வெ.க. நிர்வாகிகளும் அதே நம்பிக்கையில் இருப்பதால், மே 4-ந் தேதி தேர்தல் முடிவு எப்படி இருக்கப்போகிறது என்ற எதிர்பார்ப்பு இப்போதே தமிழக மக்களிடம் இருந்து வருகிறது. தேர்தல் முடிவு வந்த பிறகுதான், எந்த நிறுவனத்தின் கருத்து கணிப்பு சரியானது, எந்த நிறுவனத்தின் கருத்து கணிப்பு தவறானது என்பது வெளிச்சத்துக்கு வரும். ஆகையால் தேர்தல் முடிவுகளை எதிர்நோக்கி மக்கள் ஆர்வத்தில் உள்ளனர்.

# திருச்செந்தூர், சீரடியை தொடர்ந்து வேளாங்கண்ணி பேராலயம், நாகூர் தர்காவுக்கு விஜய் செல்ல திட்டம்



**சென்னை, மே.01:** தமிழகத்தில் சட்டசபை தேர்தல் முடிவுகள் வருகிற 4-ந்தேதி வெளியாகிறது. இந்த நிலையில் தமிழக வெற்றிக்கழக தலைவர் விஜய் ஆன்மிக பயணம் மேற்கொண்டு வருகிறார்.

கடந்த 28-ந்தேதி அதிகாலையில் விஜய் திருச்செந்தூர் முருகன் கோவிலில் சாமி தரிசனம் செய்தார். அவருக்கு கோவில் அர்ச்சகர்கள் சார்பில் பூரண கும்ப மரியாதை அளிக்கப்பட்டு, வேல் வழங்கப்பட்டது.

அதிகாலையில் கோவில் நடை திறந்தபிறகு நடைபெற்ற விஸ்வரூப தரிசனத்தில் விஜய் பங்கேற்று சாமி தரிசனம் செய்தார். பின்னர் சண்முகர், வள்ளி, தெய்வானை, தட்சிணாமூர்த்தி, பெருமாள் சன்னதிகளுக்கும் சென்று தரிசனம் செய்தார். சூரசம்ஹாரமூர்த்தி சன்னதிக்கும் சென்று வழிபட்டார்.

திருச்செந்தூரை தொடர்ந்து விஜய் நேற்று மகாராஷ்டிரா மாநிலம் சீரடியில் உள்ள சாய்பாபா கோவிலுக்கு சென்று தரிசனம் செய்தார். இதற்காக விஜய் சென்னையில் இருந்து தனி விமானம் மூலம் சீரடி சென்றார். அங்கு சாய்பாபாவை, விஜய் தரிசனம் செய்தார். தரிசனம் முடிந்ததும் விஜய் நேற்று மாலையே சென்னை திரும்பினார்.

தேர்தல் முடிவு வெளியாக இன்னும் 3 நாட்களே இருக்கும் நிலையில் விஜய், வேளாங்கண்ணி பேராலயம் மற்றும் நாகூர் தர்காவுக்கு புனித பயணம் மேற்கொள்ள இருப்பதாக கூறப்படுகிறது.

அதன்படி, வருகிற 2-ந்தேதி விஜய் வேளாங்கண்ணி பேராலயத்துக்கு செல்கிறார். அதனை தொடர்ந்து நாகூர் தர்காவுக்கும் செல்ல உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

அரசியல் களத்தில் மிக முக்கியமான கட்டத்தில் இருக்கும் விஜய், தனது தேர்தல் வெற்றிக்காகவும், கட்சி ரீதியான தடைகளை கடப்பதற்காகவும் இந்த தொடர் ஆன்மீக பயணங்களை மேற்கொண்டு வருவதாக கருதப்படுகிறது.

PUBLISHED BY R.S ROSHINE PRINTED BY R.S. ROSHINE ON BEHALF OF R.S. ROSHINE PRINTED AT J.M. PROCESS, NO 29, V.N. DOSS ROAD, BORDERTHOTTAM, MOUNT ROAD, CHENNAI – 600002.
AND PUBLISHED FROM NO. 42/62, BUCHAMMAL STREET, 1ST FLOOR, NEW WASHERMENPET, TONDIARPET, CHENNAI, TAMILNADU – 600081. EDITOR: R.S.ROSHINE, PH: 8122836299, E-MAIL: ANANDABHASKARNEWS@GMAIL.COM